www.janasakthi.in janasakthieditor@gmail.com janasakthi Tholaikatchi CPI Tamilnadu

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

CPI 100 Years இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925-2025

மலர் 88 இதழ் 06 | 2025 மே 11 - மே 17 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15




பொருளாதார வளர்ச்சி விகிதம் 9.69%
இந்தியாவில் தமிழ்நாடு 1 இடம்

## நாடு போற்றும் நான்காண்டு!

### தொடரட்டும் இது பல்லாண்டு!!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

## திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

தலைமையில்

### திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகள்!



**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்**
1 கோடியே 15 இலட்சம்
மகளிர் பயன்!

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்**
34,987 அரசு, அரசு
உதவிபெறும் பள்ளிகள்.
17.53 இலட்சம்
மாணவர்கள் பயன்!

**புதுமைப் பெண் திட்டம்**
மாதந்தோறும் ரூ.1000
ரூ.721 கோடி வழங்கப்பட்டு
4,83,000 கல்லூரி
மாணவிகள் பயன்!

**தமிழ்ப் புதல்வன் திட்டம்**
3,80,467 கல்லூரி
மாணவர்களுக்கு
மாதம் ரூ.1,000

**இலவச மின்சாரம்**
கைத்தறி நெசவாளர்களுக்கு 300 யூனிட்
விசைத்தறி நெசவாளர்களுக்கு 1000 யூனிட்
2,41,642 நெசவாளர் குடும்பங்கள் பயன்!

**விடியல் பயணம்**
மகளிர், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள்
ரூ.10,160.63 கோடியில்
662 கோடி முறை பயணம்!

**முதலீட்டாளர்களின் முதல் முகவரி**
897 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!
ரூ.10,27,547 கோடி
புதிய முதலீடுகள்!
32,04,895 வேலைவாய்ப்புகள்!

**நான் முதல்வன் திட்டம்**
41,83,833 பொறியியல்,
கலை - அறிவியல் கல்லூரி,
ஐ.டி.ஐ. மாணவர்களுக்குத்
தொழில் திறன் பயிற்சி!

**மக்களைத் தேடி மருத்துவம்**
2 கோடியே 15 இலட்சம் பயனாளிகள்!

**இலவச மின் இணைப்புகள்**
2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள்
'கூடுதலாக 2,99,384 ஏக்கரில் பயிர் சாகுபடி!
இவ்வாண்டில் மேலும் 50 ஆயிரம்
மின் இணைப்புகள்!

செ.ம.தொ.இ/444/வரைகலை/2025

## எல்லார்க்கும் எல்லாம் !

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 600 009.

கட்சிக் கடிதம்

# தன்னிகரில்லாப் பேரறிஞருக்குத் தலைநகரிலே சிலை!



போர்க்குணமிக்க தோழர்களே!

**தமிழ்நாடு சட்டப்பேரவையின் நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடர் கடந்த ஏப்ரல் 29 உடன் நிறைவு பெற்றுள்ளது.**

நிதிநிலை அறிக்கையினை நிதி அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு மிகவும் சிறப்பான முறையில் தயாரித்தது மட்டுமின்றி, அனைத்துப் பகுதி மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் விதமாக அமைந்தது அனைவராலும் பொதுவாக வரவேற்கப்பட்டது.

வரவேற்கப்பட்டது மட்டுமின்றி, நிதியமைச்சர் அறிக்கையினை இலக்கிய நயத்தோடு படித்த முறையும் வரவேற்புக்கு உள்ளானது. இதனைப் போன்று வேளாண்மைக்கெனத் தனி அறிக்கை என்பதும் வரவேற்புக்குரியது, ஒட்டுமொத்த தமிழகத்தில் உள்ள பயிர் வகைகள் அதன் சாகுபடி பரப்பளவு, அவைகளை மேம்படுத்திட நிதி ஒதுக்கீடுகள் குறித்து வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையினை முன் வைத்தார்.

இதனை தொடர்ந்து ஒவ்வொரு நாளும் மானியக் கோரிக்கைகளும் அதன் மீது விவாதங்களும், அமைச்சர் பெருமக்களின் பதில்களும் எனத் தொடர்ந்தது.

இக்கூட்டத் தொடரில் பிரதான எதிர்க்கட்சியான அண்ணா தி.மு.க. தனக்குக் கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, ஒவ்வொரு நாளும் தேவையற்ற வெளிநடப்பை மேற்கொண்டதைப் பொதுவாக மக்கள் ரசிக்கவில்லை.

கூட்ட முடிவின் கடைசி ஒரு சில நாட்கள் எதிர்க்கட்சித் தலைவர் மிக ஆவேசமாகப் பேசியது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

குறிப்பாக பா.ஜ.கவுடன் கூட்டணி அமைந்துவிட்டதால் ஒன்றிய அரசின் பாதுகாப்பும், பாராட்டும் தனக்குக் கிடைக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடியார் கருதியிருக்கக் கூடும்.

எதிர்க்கட்சியின் பல்வேறு வினாக்களுக்கு அல்லது உரைக்கு, முதலமைச்சரும் மற்றும் ஏனைய அமைச்சர் பெருமக்களும் உரிய பதில்களை அளித்தனர்.

நமது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களான தோழர்கள் டி.ராமச்சந்திரன், கே.மாரிமுத்து இருவரும் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பை நல்லமுறையில் பயன்படுத்தி ஆக்கபூர்வமான கருத்துகளைத் தெரிவித்தது பாராட்டுக்குரியது.

ஏறத்தாழ முப்பது நாட்கள் நடைபெற்ற கூட்டத் தொடரில் முதலமைச்சர் 110வது விதியினைப் பயன்படுத்திப் பல்வேறு அறிவிப்புகளைச் செய்துள்ளார்.

புதிய சட்ட மசோதாக்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இக்கூட்டத் தொடர் நடைபெற்றுக்கொண்டிருந்த நிலையில்தான் ஏப்ரல் 8ஆம் நாள் உச்ச நீதிமன்றம் பேரவைகளில் நிறைவேற்றப்படும் மசோதாக்கள் குறித்து தீர்ப்பளித்தது, நாடு முழுவதும் வரவேற்பைப் பெற்றது.

இத்தீர்ப்பானது, தமிழ்நாடு அரசு மேற்கொண்ட சட்டப் போராட்டத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி எனக் குறிப்பிடுவது மிகையாகாது.

தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தை நாடியதன் மூலம், ஒப்புதலுக்கு வரும் மசோதாக்கள் மீது ஆளுநர்களும், குடியரசுத் தலைவரும் எவ்வளவு காலம் எடுத்துக்கொள்ள முடியும் என்று வழிகாட்டியுள்ளது.

ஆண்டுக் கணக்கில் கிடப்பில் போடுவதை சட்டவிரோதம் என்றும் மூன்று மாத காலத்திற்குள் முடிவு காண வேண்டும் என்றும் கூறியது மட்டுமல்ல, தமிழ்நாடு சட்டப்பேரவையில் இரண்டாவது முறையாக நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பப்பட்ட நாள் முதல் 10 மசோதாக்களும் செல்லும் என உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பு எனக் கூறாமல் வேறு என்னவென்று கூறுவது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பால் தமிழ்நாடு மட்டுமல்ல, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் உள்ள ஆளுநர்கள் நடத்தி வரும் போட்டி அரசு நடத்துவது, சட்டப்பேரவைகளை மதிக்காமல் தன்னிச்சையாக நடந்து கொள்வது, தங்களுக்கு வானளாவிய அதிகாரம் இருப்பதாகத் தங்களுக்குத் தாங்களே முடிசூட்டிக்கொண்டு இறுமாப்புடன் செயல்படுவது போன்ற நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. ஆனாலும்ரவி அடங்குவதாகத் தெரியவில்லை. வழக்கம்போல்தான் ஒரு ஆர்.எஸ்.எஸ் இன் பிரச்சாரகர் என்பதனைத் தனது செயல்பாட்டின் மூலம் நிலைநாட்டி வருகின்றார். நாய் வாலை நிமிர்த்த இயலாது என மற்றவர்களைப் பற்றிச் சொல்லலாம்; ஆளுநரைச் சொல்லக் கூடாது.

இக்கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில் உச்சநீதிமன்றத் தீர்ப்பு வந்தது அனைவரையும் பெரும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

இம்மகிழ்ச்சிகரமான சூழலில்தான், கோயில் மனையில் குடியிருப்போர் சங்கம் சார்பில் பேரணி நடத்தி நிர்வாகிகள் மாண்புமிகு முதலமைச்சரைச் சந்தித்துக் கோரிக்கை மனு அளித்தனர். வாடகை முறை ரத்து செய்யப்பட வேண்டும் என்பது முக்கியக் கோரிக்கையாகும். பரிசீலித்து அரசு நல்ல முடிவை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கின்றோம்!



பணத் தேவை என்பது பலருக்குப் பலவிதங்களில் தேவைப்படுகின்றது. பலருக்கு ஆடம்பரச் செலவினங்களுக்குத் தேவைப்படுகின்றது. அவர்கள் கடன் பெறுவதும், திரும்பச் செலுத்த முடியாமல் நெருக்கடிக்கு ஆளாவதும் ஒருபுறம் என்றால், விவசாயிகள், தொழிலாளர்கள், ஏழை எளிய மக்கள் தங்களின் மிக அத்தியாவசியத் தேவைகளுக்காக கடன் பெறுகின்றார்கள்.

கல்விக் கடன், திருமணக் கடன், தொழில் கடன், வீட்டுக் கடன், வீடுகள் புனரமைக்கும் கடன் என அத்தியாவசியப் பணிகளுக்குக் கடன் பெறுகின்றார்கள். அவ்வாறு பெறப்படும் கடன் தனியாரிடத்தில் அதிக வட்டிக்குப் பெறுகின்றார்கள்.

அவ்வாறு பெறப்பட்ட கடனுக்குரிய வட்டியை அவர்கள் மாதம்தோறும் செலுத்தாமல் இல்லை. வட்டி மற்றும் அசலையும் செலுத்தி வருகின்றார்கள். மாதக் கணக்கில், ஆண்டுக்கணக்கில் வாங்கிய கடனை விட அதிகத் தொகையைத் திருப்பிச் செலுத்தினாலும், முழுக் கடனையும் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் கடன் கொடுத்த கந்துவட்டிக்காரர்கள் எவ்வித இரக்கமும், மனிதாபிமானமும் இன்றிக் கடன் பெற்றவர்களை இம்சிப்பதும், தாக்குவதும், அவமரியாதையாகப் பேசவும், இதன் காரணமாகக் கடன் பெற்றவர்கள் குடும்பங்கள் அவமானப்பட்டுத் தற்கொலை வரைச் செல்லும் அவலநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்களுக்கான பல்வேறுவிதமான ஒன்பது சலுகைகள் முதல்வரால் அறிவிக்கப்பட்டுள்ளது வரவேற்பைப் பெற்றுள்ளன. பழைய ஓய்வூதியப் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும் எனும் நியாயமான கோரிக்கை நிலுவையில் உள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு, தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் உட்பட 18 மசோதாக்களை பேரவை நிறைவேற்றி உள்ளது.

வக்ஃபு போர்டு சட்டத்தை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என்கிற தீர்மானம் பேரவையில் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

இந்த மண்ணின் ஆதிக்குடிகளை இழிவுபடுத்தும் அடையாளமாக 'காலனி' என்ற சொல் மாற்றப்பட்டு இருப்பதால்இனிஇந்தச்சொல் அரசு ஆவணங்களில் இருந்தும், பொதுப் புழக்கத்திலிருந்தும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற முதல்வர் அறிவிப்பு, உள்ளும் புறமுமாக சமூகநீதியை நிலைநாட்டுகிற அரசின் முயற்சியை வெளிப்படுத்துகிறது.

பல்வேறு மசோதாக்களையும், அறிவிப்புகளையும் ஏற்று நிறைவேற்றிய தமிழ்நாடு சட்டப்பேரவையில் வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை வெளியிட்டு நம் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

தலைநகர் சென்னையில் பேரறிஞர் மார்க்ஸ்க்குச் சிலை வைக்க வேண்டும் எனப் பல்வேறு அமைப்புகளும், கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட பல கட்சிகளும் கோரி வந்தன. சிலை அமைப்புக் குழு தலைநகர் சென்னையில் மார்க்ஸுக்குச் சிலை வைக்க வேண்டுமென, முதலமைச்சரை நேரில் சந்தித்து மனு கொடுத்தது.

நமது கட்சியும் மார்க்சிஸ்ட் கட்சியும் அரசுக்கு கோரிக்கை வைத்தன.

இவைகளை எல்லாம் பரிசீலித்த முதலமைச்சர் தலைநகர் சென்னையில் மார்க்சுக்குச் சிலை வைக்கப்படும் என்று பேரவையில் அறிவித்தது பெரு மகிழ்ச்சியாக அமைந்தது.

உலகம் முழுமையும் உள்ள கரத்தாலும், கருத்தாலும் உழைக்கக்கூடிய எண்ணிலடங்கா உழைப்பாளி மக்களின் விடியலுக்கு வழிவகை செய்திட்ட, உலகமே மாமேதை எனப் போற்றிப் புகழும் மாபெரும் சமூக விஞ்ஞானி மார்க்ஸ்க்குச் சிலை அமைக்கப்படும் என்று பேரவையில் அறிவித்தது மட்டுமல்ல, சென்னை கன்னிமாரா நூலக வாயிலில் சிலை அமைப்பதற்கான இடமும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

உலகம் நிராகரிக்க முடியாத மாபெரும் சக்தி வாய்ந்த சமூக விஞ்ஞானி! உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள், இழக்கப் போவது உங்கள் கை விலங்கே, அடையப்போவதோ பொன்னுலகம்! என்ற மகத்தான உண்மையை உலகத்திற்கு உணர்த்திய மேதை, பொதுவுடைமைச் சமுதாயமே அனைத்துக்கும் தீர்வு என்பதனை ஆணித்தரமாக மட்டுமல்ல, ஆதாரப்பூர்வமாக நிரூபித்துக் காட்டிய மேதை.

அப்படிப்பட்ட மாமேதைக்கு தலைநகர் சென்னையில் சிலை அமைக்கப்படும் என அறிவித்து அதற்கான பணிகளையும் தொடங்கிவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தொடர் முயற்சிகளை மேற்கொண்ட தோழர்களுக்கும் நன்றி பாராட்டுக்கள்.

மீண்டும் சந்திப்போம்

வணக்கம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)

மாநிலச் செயலாளர்

www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu


நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925-2025

மலர் 88 இதழ் 06 | 2025 மே 11 - மே 17 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

# மே 20 வேலைநிறுத்தம்: வெற்றி பெறச்செய்வீர்!

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு அறைகூவல்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு கூட்டம் திருப்பூரில் மே 7ஆம் தேதி அன்று, திருப்பூர் எம்.ரவி தலைமையில் நடைபெற்றது.**

தேசியச் செயலாளர் டாக்டர் கே.நாராயணா, உலக அரசியல் சூழல், பயங்கரவாத தளங்கள் மீதான இந்திய ராணுவத் தாக்குதல், சண்டிகரில் நடக்க இருக்கும் கட்சிப் பேராயம் உள்ளிட்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில, மாவட்ட, ஒன்றிய, கிளை மாநாடுகள் குறித்த விவரங்களை விளக்கிக் கூறினார். அவரது ஆங்கில உரையைத் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி தமிழில் மொழிபெயர்த்தார்.

கூட்டத்தில் மாநிலத் துணைச் செயலாளர்கள் நா.பெரியசாமி, மு.வீரபாண்டியன், பொருளாளர் எம்.ஆறுமுகம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுப்பராயன், வை.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து மற்றும் செயற்குழு, நிர்வாகக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட மாநிலக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டின் அரசியல் சூழல் மற்றும் கட்சி மாநாடுகளில் முன்னுரிமை தந்து விவாதிக்கப்பட வேண்டிய விஷயங்கள் குறித்த அறிக்கையை மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் முன் வைத்தார்.

பின்வரும் தீர்மானங்களை மாநிலக் குழு ஒரு மனதாக நிறைவேற்றியது.

**மே 20 பொது வேலை நிறுத்தம்:**

இந்தியத் தொழிலாளர்கள் 150 ஆண்டு காலமாகப் போராடிப் பெற்றெடுத்த வேலைப் பாதுகாப்பு, ஊதியப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை முற்றிலும் பறித்து, அவர்களை உரிமைகளற்ற அற்றைக் கூலிகளாக மாற்றும் வகையில் ஒன்றிய

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்




## கா.சி.தமிழ்க்குமரன் மறைவு



கட்சிக் கூட்டங்களில் மறைந்தவர்களின் பெயர்களைத் தொகுத்து அஞ்சலித் தீர்மானம் முன்வைத்ததும் அனைவரும் மவுனமாக எழுந்து நிற்பது வழக்கம்.

இக்கூட்டத்தில் பகல்காமில் பயங்கரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டவர்களுக்குத் தனியாக அஞ்சலித் தீர்மானத்தைத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் முன்மொழிய இன்னொரு முறை மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

எல்லோரோடும் சேர்ந்து இரண்டு முறை எழுந்து அஞ்சலி செலுத்திய மாநிலக் குழு உறுப்பினர் தோழர் கா.சி.தமிழ்க்குமரனுக்கு, சில மணி நேரங்களுக்குள் அதே கூட்டம் தனக்கு அஞ்சலி செலுத்த மூன்றாவது முறையாக எழுந்து நிற்கும் என்று தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

மதிய உணவு இடைவேளையில், எல்லோரோடும் சேர்ந்து உணவருந்தினார். கை கழுவி விட்டு வந்த போது, மூச்சுத் திணறுகிறது என்றார். உணவருந்திக் கொண்டிருந்த டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, அதைத் தள்ளி வைத்துவிட்டு, உடனே வந்து, அவரைப் படுக்க வைக்கச் சொன்னார். டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத்தும், டாக்டர் த.அறமும் ஓடி வந்து, இதயத்தைத் தொடர்ந்து விட்டு விட்டு அழுத்தி, அதை இயங்கவைக்க முயன்றனர்.

அவரது உடலும் ஒத்துழைத்தது. நன்றாக மூச்சிழுத்தார். ஆம்புலன்ஸ் வர நேரமாகிவிடும் என்று, உடனே காரில் படுக்க வைத்து, டாக்டர்களும் உடன் சென்றனர்.

அருகிலிருந்த மருத்துவமனைக்குச் செல்லும் போதே, உயிர் பிரிந்து விட்டது!

அதிர்ந்து பேசாதவர். எப்போதும் முகத்தில் சிரிப்பிருக்கும். அரசியல் தெளிந்தவர். இலக்கு நோக்கி அயராது உழைப்பவர். வழக்கறிஞர். ஐம்பத்தேழே வயது. சர்க்கரை, ரத்த அழுத்தம் எதுவுமில்லை. கார்டியாக் அரெஸ்ட் என்றார்கள்!

மறுபடியும் கூட்டம் தொடங்கிய போது தமிழ்க்குமரனுக்கு அஞ்சலி செலுத்திய பின்பு ஒத்திவைக்கப்பட்டது.

# பாராட்ட வேண்டியதைப் பாராட்டுங்கள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்

**பாராட்ட வேண்டியதைப் பாராட்டினால்தான், விமர்சனத்துக்கான மரியாதையும் மதிப்பும் கிடைக்கும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.**





சென்னை கலைவாணர் அரங்கில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பத்திரிகையாளர்கள், ஊடகத் துறையினர் சந்திப்பு நிகழ்ச்சி மே ஆறாம் தேதி நடைபெற்றது. இதனை தொடங்கிவைத்து அவர் உரையாற்றினார். அப்போது,

“திமுக தலைமையிலான அரசு எத்தகைய சூழலில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். முந்தைய ஆட்சியாளர்களால் சீரழிந்த பத்தாண்டு கால நிர்வாகம் ஒரு பக்கம். மதவாதம் உள்ளிட்ட பிற்போக்குத்தனங்களுக்கு இடமளித்து, இந்திய நாட்டைச் சீரழித்துக் கொண்டிருக்கக் கூடிய அந்த நிலை ஒரு பக்கம். தமிழ்நாட்டுக்கு எந்தவித ஒத்துழைப்பையும் தர மறுக்கும் மத்திய அரசின் இன்னொரு பக்கம். இதையெல்லாம் சமாளித்து ஆட்சிநடத்திக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டை மீண்டும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு போக வேண்டும் என்ற எண்ணம்தான் எனக்குள் இருந்தது. சரியான இலக்கை நிர்ணயித்து, அதை நோக்கி உறுதியாகப் பயணித்து, சாதிக்க முடியும் என்பதற்கு இந்த நான்காண்டு கால திராவிட மாடல் அரசே சாட்சியாக அமைந்திருக்கிறது.

இந்த நான்கு ஆண்டுகளில் கடுமையான நெருக்கடிகள் வந்தன. ஆனாலும், எந்த இடத்திலும் கொள்கையில் தடம் மாறவில்லை. எந்தச் சூழ்நிலையிலும் மக்களுக்கான சேவைகளை வழங்குவதில் சோர்ந்து போகவில்லை. கொள்கை, சேவை இரண்டிலும் திராவிட மாடல் அரசு சிறந்து விளங்குகிறது.

சமத்துவம், சமூக நீதி, சமதர்மம், சகோதரத்துவம், மதச்சார்பின்மை, மொழிப்பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி ஆகிய அரசியல் பண்பாடுகளைக் கொண்ட மண், நம் தமிழ்நாடு. இந்த லட்சியங்களை அடையும் பயணத்தில் நாங்கள் இருக்கிறோம். இந்தப் பயணத்தில் ஊடகங்களின் பங்கு மிகவும் முக்கியமானது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 06

## போராக மாற்றப்படுவது சரியல்ல

பாகிஸ்தானிலும், பாகிஸ்தான் ஆக்கிரமித்த காஷ்மீரிலும் ஜெய்ஷ்இ முகமது மற்றும் லஷ்கர்இதொய்பா பயங்கரவாதிகளின் நிலைகள் என்று சொல்லப்படும் பஹவல்பூர், முரிட்கே, சர்ஜால், சியால்கோட், பிம்பர், கோட்லி, ஷவாய், நல்லா கேம்ப், பிலால் முகாம் ஆகிய 9 இடங்களின் மீது இந்திய ராணுவம், மே 7ஆம் தேதி அதிகாலை தாக்குதல் நடத்தி இருக்கிறது.

இந்த ஒன்பது பயங்கரவாத தளங்களும், சுகாதார மையங்களை போல காட்டிக் கொண்டனவாம்.

இந்தியாவின் அனைத்து கட்சிகளும் இந்தத் தாக்குதலை ஆதரித்துள்ளன. மோடி ஆட்சிக்கு வந்த 11 ஆண்டுகளில், அனைத்துக் கட்சிகளும் ஆதரிக்கும் முதலாவது நடவடிக்கை இதுவே ஆகும்.

“முழு நாடும் நம்மை பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்திய ராணுவத்தைப் பற்றி நாம் பெருமிதம் கொள்கிறோம்” என்று பிரதமர் மோடி அமைச்சரவை கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

‘ஆபரேஷன் சிந்தூர்’ நடவடிக்கைக்கு பிறகு எல்லையில் இந்தியா தாக்குதலை நிறுத்தினால் பாகிஸ்தான் தனது அடுத்த கட்ட நடவடிக்கையை தவிர்க்க தயாராக உள்ளது என்று பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் காஜா ஆசிப் தெரிவித்துள்ளார். மறுபக்கத்தில் இந்திய தாக்குதலுக்கு ஏற்ற உரிய நடவடிக்கையை மேற்கொள்ள படைகளுக்கு முழு அதிகாரம் அளித்து இருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் கூறியிருக்கிறார்.

பயங்கரவாதிகளை ஒடுக்குவது என்பது வேறு. அதே நேரத்தில் இது இந்தியா பாகிஸ்தான் இடையிலான ஒரு போராக மாற்றப்படுவது சரியும் அல்ல; நல்லதும் அல்ல.

“முதலாளித்துவ நாடுகளுக்கு இடையிலான போர்கள் பெரும்பாலும் உழைக்கும் மக்களின் நலன்களுக்காக அல்ல, ஆளும் வர்க்கங்களின் நலன்களுக்காகவே நடத்தப்படுகின்றன” என்பது மார்க்சிய மூலவர்களின் கருத்தாகும்.

தமிழ்நாடு உட்பட, போருக்கான பயிற்சிகள் நாடெங்கும் மேற்கொள்ளப்படுகின்றன. பாகிஸ்தான் எல்லையில் உள்ள விமான நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டன.

ஆனால் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகள் மட்டும் திட்டமிட்டபடி அதே நாள்களில் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

“வேறொரு நாட்டின் நிலத்திலிருந்து தனக்கு எதிரான பயங்கரவாதத் தாக்குதலை எந்த நாடும் ஏற்க வேண்டியது இல்லை” என்று பிரிட்டன் கருத்து தெரிவித்துள்ளது.

“பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இந்தியாவுக்கு உரிமை உண்டு பதிலடி தருவது பற்றி பாகிஸ்தான் யோசிக்க வேண்டாம்” என்று அமெரிக்க வெளியுறவு துறை செயலாளர் மார்கோ ரூபியோ கூறியிருக்கிறார்.

“இது சீக்கிரம் முடிய வேண்டும்” என்கிறார் அமெரிக்கா அதிபர் ட்ரம்ப்.

ஆப்ரேஷன் சிந்தூர் குறித்து இந்தியா முன்கூட்டியே அமெரிக்காவுக்கு தெரிவித்திருந்தது என்று நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை எழுதுகிறது.

ஒளிவு மறைவில்லாமல், பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் ஆசிப் உண்மையை போட்டு உடைத்திருக்கிறார். ‘அமெரிக்காவிற்காகவும், பிரிட்டன் உட்பட மேற்கத்திய நாடுகளுக்காகவும் சுமார் மூன்று தசாப்தங்களாக, பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவும் பயிற்சியும் நிதி உதவியும் வருகிற மோசமான அசுத்த வேலையை பாகிஸ்தான் செய்து வருகிறது”.

“அது ஒரு தவறு, அதனால் நாங்கள் பாதிக்கப்பட்டோம். இந்தப் பகுதியில் என்ன நடந்தாலும் அதற்கு பாகிஸ்தானைக் குறை கூறுவது பெரிய வல்லரசுகளுக்கு மிகவும் வசதியானது. அவர்களது ஆணையின் படி 80களில் சோவியத் யூனியனுக்கு எதிராக கலகம் செய்து சீர்குலைப்பதில் வெற்றி பெற்று, அந்தச் செயலுக்காக வாஷிங்டனில் அவர்கள் விருந்து தந்து கொண்டாடியவர்களைத்தான், இன்று பயங்கரவாதிகள் என்று சொல்கிறார்கள்” என்றார் அவர்.

இந்த பதட்ட சூழல் உருவானதற்கு பின்பு, ஆயுதங்களைத் தயாரிக்கும் நிறுவனங்களின் பங்கு விலை உயர்ந்து கொண்டிருப்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

இது ஒரு புறம் இருக்க, “இந்தியா சுதந்திரம் அடைந்தபோது ஏற்பட்ட சந்தோஷத்தை விட, இன்று மிகுந்த மகிழ்ச்சியான நாளாக அமைந்துள்ளது” என்று பேசியிருக்கிறார் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன். 1947ல் அவருக்கு எத்தனை வயது என்று தெரியவில்லை!!

எல்லைக்குச் சென்று போரில் பங்கேற்க தயாராக வேறு இருக்கிறாராம் ‘ரகசிய வேலைகளில் சமர்த்தரான’ நயினார்.

“சட்டமன்ற தேர்தலுக்கு விரைவில் கூட்டணியை முடிவு செய்து ஆபரேஷன் சிந்தூர் போல 2026ல் தமிழகத்தில் ‘வெற்றிவேல் வீரவேல்’ ஆபரேஷனை தொடங்கப் போவதாகவும் பேசியுள்ளார்.!

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையோடு தமிழ்நாட்டையும் ஒப்பிட்டு அவர் பேசுகிறார் என்றால், தமிழ்நாட்டை எதிரி நாடு என்றே பாஜக முடிவெடுத்து விட்டது என்றுதான் பொருள் கொள்ள முடியும்.

தனக்கு எதிரான ‘பயங்கரவாதி’களின் அடையாளங்களை தமிழ்நாடு அறிந்தே இருக்கிறது!

### 26வது மாநில மாநாட்டை நோக்கி... 1

# முன்னால் நின்ற சேலம்



ப.பரமசிவம்

இந்தியாவிலேயே முதலாவதாக உருவாக்கப்பட்ட மாவட்டம் சேலம் மாவட்டம். மக்களின் உணவு தேவையைப் பூர்த்தி செய்ய வணிக வளாகம் முதலில் கட்டிய மாவட்டம் சேலம். இந்தியாவில் முதலில் நில அளவைபோட்டுசர்வேஎண் கொடுத்த மாவட்டம் சேலம். இந்தியாவிலேயே முதல் பொதுத்துறையை உருவாக்கிய மாவட்டம் சேலம். கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தை முதலில் உருவாக்கிய மாவட்டம் சேலம். தமிழ் நாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைத் தொடங்குவதற்கான அமைப்புக் கூட்டம் நடந்ததும் சேலம் மாவட்த்தில்தான்.

கி.பி. 1790ஆம் ஆண்டு தளபதி கிண்டர்லி இப்பகுதி ஆண்டார். அவரைத் தொடர்ந்து படைத்தளபதி அலக்சாண்டர்ரீட் என்பவர் பொறுப் பேற்றார். 1792ஏப்ரல்4ம் நாள் முதல் 1799 ஜூலை 7ம் நாள் வரை படைத்தளபதியாகவும் ஆட்சியராகவும் பொறுப்பேற்றார் கி.பி.1792ம் ஆண்டில் இந்தியாவிலேயே முதன் முதலில் சேலம் மாவட்டமாக உருவாக்கப்பட்டு ஓர் படைத் தளபதி ஆட்சியராக அமர்த்தப்பட்டது சேலம் மாவட்டத்தில்தான்.

உணவுப் பஞ்சம் ஏற்பட்ட பொழுது 1919 ஆண்டு ஜனவரியில் சேலம் செவ்வாய்பேட்டையில் வணிகர் சங்க உதவியுடன் மாபெரும் தானிய விற்பனை வளாகத்தை உருவாக்கியவர் லீஎன்பவர் ஆட்சியராக இருந்த பொழுதுதான். அந்த வளாகம் தற்போது வரை லீபஜார் என்றுதான் அழைக்கப்படுகிறது.

இந்தியாவிலேயே முதன் முதலில் 1893 ல் தொடங்கி 1897 வரை நில அளவை செய்து சர்வே எண் தரப்பட்ட மாவட்டமும் சேலம்தான். முதல் உலகப் போரின் போது போர்க்களத்தில் படைவீரர்களும் தளவாடங்களும் உணவுப் பொருட்களும் திரட்டப்பட்டன.

அதற்காக சேலத்துக்கும் கடலூருக்கும் ரயில் பாதை போட திட்டமிடப்பட்டது. நிதி நெருக்கடியில் இருந்ததால் அந்த திட்டம் நிறுத்தப்பட்டது, சேலம் ஜங்சன் முதல் சேலம் நகரம் வரை 5.4 கி.மீ. தூரம் அப்பொழுதிருந்த ஆட்சியர் வெள்ளை அரசிடம் வாதாடி அனுமதி வாங்கி பாதை அமைத்து ரயில் விடப்பட்டது. இது தான் இந்தியாவிலேயே முதல் பொதுத்துறை, அதற்கு முன் இந்தியா முழுதும் ரயில் நிலையங்கள் இருந்தன. அத்தனையும் தனியார் துறை ஆகும்.

வெள்ளையர் ஆட்சி காலத்தில் கைத்தறி தொழிலாளர்களுக்கு பாவு நூல் இல்லாமல் வேலை கிடைக்காததால் கைத்தறி நெசவாளர்கள் பட்டினியால் வாடினார்கள். கைத்தறி குடும்பங்களை சார்ந்தவர்கள் குடும்பம் குடும்பமாக மாவட்ட கலெக்டர் தினமும் சந்தித்து குறைகளை எடுத்து கூறியுள்ளார்கள் அந்த கலெக்டரும் கைத்தறி நெசவாளர் அவல நிலையை பார்த்து மனமுருகி ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் ரூபாய் நூறு கொடுத்துள்ளார்.

இதை கேட்டு நெசவாளர்கள் தினமும் படையெடுப்பதை பார்த்து அவராலும் பணம் கொடுக்க முடியவில்லை அதன் பிறகு அவர் சிந்தித்து சேலம் குகை நெசவாளர் சொசைட்டியை உருவாக்கி அதன் மூலம் நெசவாளர்க்கு வேலை கிடைக்க செய்துள்ளார். அதன் மூலம் சேலம் நகரத்தை ஒட்டியுள்ள கிராமங்களிலிருந்தும் கைத்தறி நெசவாளர்கள் உறுப்பினராகி தொழில் செய்து வந்தார்கள். இந்த சேலம் குகை நெசவாளர் சொசைட்டித் தான் இந்தியாவிலேயே முதல் கைத்தறி நெசவாளர் சொசைட்டியாகும்.



எம்.ஆர்.வெங்கட்ராமன்



டாக்டர் சுப்பராயன்



மோகன் குமாரமங்கலம்



பார்வதி கிருஷ்ணன்

இவ்வளவு சிறப்பு வாய்ந்த அன்றைய ஒன்றுபட்ட சேலம் மாவட்டத்தின் திருச்செங்கோட்டில் தோழர் மோகன் குமாரமங்கலம் தோழர் பார்வதி கிருஷ்ணன் வளர்ந்த டாக்டர் சுப்பராயன் வீட்டில்தான். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில முதல் அமைப்பு கூட்டம் நடைபெற்றது. அதில் மாநிலப் பொறுப்பாளர்களாக தோழர்கள் மோகன் குமாரமங்கலம். எம்.ஆர்.வெங்கட்ராமன் ஆகியோர் 1942ல் தேர்வு செய்யப்பட்டார்கள்.

அமைப்பு கூட்டம் போட்டு 83 ஆண்டுகள் கடந்துவிட்டன. தற்பொழுதுதான் அதுவும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா காணும் தருணத்தில் 2025 ஆக 15, 16, 17, 18 தேதிகளில் சேலத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு நடத்துவதாக மாநிலக் கட்சி முடிவு செய்துள்ளது. மாநாடு சிறக்க அனைவரும் எறும்புகளைப் போன்றும் தேனீ போன்றும் சுறு சுறுப்பாக செயல்பட்டு மாநாட்டை சிறப்புற நடத்துவோம்.

**தொடர்புக்கு : 9442995040**

### 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்தியாவுக்கே முன்மாதிரியாக பலதிட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட திட்டங்களை மனபூர்வமாகப் பாராட்ட வேண்டும். விமர்சிக்க வேண்டாம் எனச் சொல்லவில்லை. சில ஊடகங்கள் விமர்சிப்பதில் காட்டும் ஆர்வத்தை சிறந்த திட்டங்களைப் பாராட்டுவதில் கவனம் செலுத்துவதில்லை.

பாராட்ட வேண்டியதைப் பாராட்டினால்தான், விமர்சனத்துக்கான மரியாதையும் மதிப்பும் கிடைக்கும். எனவே, தயங்காமல் விமர்சிப்பது போன்று, தயங்காமல் பாராட்டுங்கள். தனிப்பட்ட ஸ்டாலினையோ, திமுக அரசையோ பாராட்ட வேண்டும் என்று கேட்கவில்லை. தமிழ்நாட்டைப் பாராட்டுங்கள் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டின் வளர்ச்சி, தனித்துவத்தை மக்களிடம் எடுத்துச் செல்லுங்கள்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.

இறுதியாக பத்திரிகை மற்றும் ஊடகத்துறையினர் கருத்துகளைத் தெரிவித்துப் பேசினர். அப்போது பேசிய ஜனசக்தி ஆசிரியர் டி.எம்.மூர்த்தி, “தந்தை பெரியாரின் பேச்சுகள் எழுத்துகளை காலவரிசை அடிப்படையில் தமிழ்நாடு அரசே தொகுத்து வெளியிட வேண்டும். அம்பேத்கரின் எழுத்துகளை மகாராஷ்டிரா அரசு தொகுத்து வெளி யிட்டது போல், மகாத்மா காந்தியின் எழுத்துகளை ஒன்றிய அரசு தொகுத்து வெளியிட்டது போல் இந்தியாவின் அனைத்து மொழிகளிலும், அந்நிய மொழிகளிலும் வெளியிட வேண்டும். ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோதப் போக்கு எதிராக மே 20 ஆம் தேதி நடைபெறும் பொது வேலைநிறுத்தத்தை தமிழ்நாடு அரசு ஆதரிக்க வேண்டும்” என்று கேட்டுக்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில், மூத்த அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அதிகாரிகள். பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களின் உரிமையாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், செய்தியாளர்கள் கலந்துகொண்டனர்.

# வேட்டையாடு! விழு!



டி.எம்.மூர்த்தி

**‘பேராசை பெருநட்டம்’ என்ற தமிழ்ப் பழமொழி அதிபர் ட்ரம்ப்புக்குத் தெரியாமல் போனாலும் “Pigs get fat, hogs get slaughtered” (பன்றி கொழுத்தால், கசாப்புக் கடையில் வெட்டப்படும்) எனும் அமெரிக்கப் பழமொழியையாவது அறிந்திருக்க வேண்டும்.**




அமெரிக்காவின் நெருக்கடிகளை எல்லாம், அடுத்த நாடுகளின் மீது ஏற்றி விட வேண்டும்; அதிலும் தனக்குக் கடும் போட்டியாக விளங்குகிற சீனாவின் பொருளாதாரத்தை ஆட்டி விட வேண்டும் அந்த எண்ணத்தில்தான் புதிய வரிக் கொள்கையை அவர் அறிவித்தார்.

உலகின் பெரும்பாலான நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 10 சதவீத அடிப்படை வரி, சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 145 சதவீத வரி என்று உயர்த்தினார்.

ஆட்டம் போட்ட ட்ரம்ப், இப்போது ஆடிப் போயிருக்கிறார். வேட்டைக்குப் போனவரே, வேட்டையாடப்பட்ட கதை இது!

ஒவ்வொரு நாடுகளில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான வரியை உயர்த்தினால், அமெரிக்கா வருமானம் கூடும். மறுபக்கம் இறக்குமதி பொருள்களின் விலை உயர்வால், உள்நாட்டு உற்பத்தி பெருகும் என்பது அவரது கணக்கு.

## பூஜ்ஜியத்துக்குக் கீழே:

ஆனால் முதலில் இங்கு வந்தது மோசம்! புதிய வரிக் கொள்கை செயல்படுத்தப்பட்ட பின், அமெரிக்கப் பொருளாதார வளர்ச்சி பூஜ்ஜியத்துக்கு வந்து, இப்போது மைனஸில் சென்று கொண்டுள்ளது.

டிரம்ப்பின் அதிரடி வரி விதிப்பு காரணமாக அமெரிக்கப் பொருளாதாரம் குறித்த நுகர்வோர் நம்பிக்கை 32 சதவீதம் குறைந்துள்ளதாக கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

பொருளாதார மந்த நிலை நிலவிய கடந்த 1990ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு அமெரிக்க நுகர்வோர் நம்பிக்கை இந்த அளவுக்குக் குறைந்துள்ளது இதுவே முதல்முறை.

இரண்டாவது ஆண்டிலும் வளர்ச்சி விகிதம் பின்னோக்கிச் செல்லுமானால், அமெரிக்கா பொருளாதார மந்தநிலையைச் சந்திக்க நேரிடும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

## என்ன நிகழ்ந்தது?

சீன இறக்குமதிகள் மீதான தொடர்ச்சியாக வரி உயர்வை அதிகரித்ததால், அமெரிக்காவில் பின்வரும் பொருள்களின் விலைகள் உயர்ந்தன.

மின்சார வாகனங்கள் (ஈ.வி.கள்): 25%லிருந்து 100% ஆக வரி அதிகரிப்பு.

செமி கண்டக்டர்: வரி 25%லிருந்து 50% ஆக உயர்வு.

பேட்டரிகள், உதிரி பாகங்கள்: வரி 7.5%லிருந்து 25% ஆக கூடுதல்.

எஃகு, அலுமினியப் பொருட்கள்: 25% வரி உயர்வு

சூரிய மின்கலங்கள்: வரி 25%லிருந்து 50% ஆக அதிகரிப்பு.

## மருத்துவ உபகரணங்கள்:

சிரிஞ்ச் (ஊசி) வரி 100% உயர்த்தப்பட்டது.

அமெரிக்காவின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக என்று கூறி செயல்படுத்தப்பட்ட வரிக் கொள்கை அமெரிக்காவில் நேர் எதிரான விளைவுகளை ஏற்படுத்தியது.

நுகர்வோர் தாக்கம்: அமெரிக்காவின் உற்பத்தி அதிகரிக்கப்படாத நிலையில், சீன இறக்குமதியும் தடுக்கப்பட்டதால், மின்சார வாகனங்கள் மற்றும் மின்னணுவியல் போன்ற பொருட்களுக்கான விலைகள் திடீரென அதிகரித்தன.

## உலகளாவிய வர்த்தகப் பதற்றங்கள்:

அமெரிக்காவின் வரி உயர்வு நடவடிக்கைகளுக்குப் பதிலடி கொடுத்த சீனா, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 84% வரி உயர்வு செய்தது. இது அமெரிக்காவின் ஏற்றுமதியைச் சீர்குலைத்து விட்டது.

## நிச்சயமற்ற சந்தை:

அடிக்கடி வரி உயர்த்தப்படுவதால், உற்பத்திப் பொருட்களின் விலையைச் சரியாக நிர்ணயிக்க முடியவில்லை. இந்த நிச்சயமற்ற, கணிக்க முடியாத நிலை காரணமாக, முக்கிய நிறுவனங்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை ஒத்திப் போடுகின்றன. இதனால் உற்பத்தி இழப்பு ஏற்படுகிறது.

## டாலர் மதிப்பு சரிவு:

புதிய வரிக் கொள்கை அறிவிக்கப்பட்ட பிறகு, அமெரிக்க டாலர் மதிப்பு ஏறத்தாழ 9% வரை குறைந்துள்ளது. இது நீண்டகால பொருளாதார நிலைத்தன்மை குறித்த கவலைகளை எழுப்பி இருக்கிறது.

## ஆதரவாளர்களே எதிர்க்கிறார்கள்:

டெஸ்லா, அமேசான் போன்ற கார்ப்பரேட் நிறுவனங்கள், அமெரிக்கத் தேர்தலில் டிரம்புக்கு ஆதரவாக வேலை செய்ததோடு, பெரும் பணப்பலனும் பெற்றன. ஆனால், அவரது புதிய வரிக் கொள்கை அவற்றுக்கு இசைவாக இல்லை. அவற்றின் நிர்வாகிகள் தனிப்பட்ட முறையில் விரக்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

உலகம் எங்கும் வணிகச் சங்கிலி கொண்டுள்ள அமேசான் எந்தப் பொருளையும் உற்பத்தி செய்வது இல்லை. மாறாக உற்பத்தி செய்பவர்களிடம் இருந்து பொருள்களை எடுத்து, நுகர்வோருக்குக் கொண்டு சேர்க்கிறது. இதில் பல உற்பத்திப் பொருட்கள் சீனாவில் இருந்து வருபவை.

ஒரு நிறுவனம் தனது விற்பனை விலையை உயர்த்தாமல், கூடுதல் வரியையும் இணைத்துக் கொண்டால், அதன் லாபத்தில் பாதிப்பு ஏற்படும். அதற்குப் பதிலாக விற்பனை விலையோடு, வரியைத் தனியாகச் சேர்த்தால் விலை உயர்ந்து பொருள் விற்பனை குறையும்.

இதற்காக அமேசான் நிறுவனம், பொருளின் அடிப்படை விலையைத் தனியாகவும், வரியைத் தனியாகவும் நுகர்வோருக்குத் தெரிவிப்பது என்று முடிவு செய்தது. அதாவது ஒரு அலைபேசியின் விலை ரூ.20,000 என்றால், அதற்கு உயர்த்தப்பட்ட வரி ரூ.2,000 ஆக இருக்குமானால், நுகர்வோருக்கு பில் போடும்போது, அடிப்படை விலை ரூ.20,000, அமெரிக்க வரி ரூ.2000 என்று தனித்தனியாகக் காட்டுவது என முடிவு செய்தது.

## ஜெஃப் பெசோஸ் அமேசான்:

இந்த முடிவை, வெள்ளை மாளிகை “எதிர் நிலையான அரசியல் செயல்” என்று கண்டித்தது. மேலும் அமேசான் நிறுவனத்தின் முதலாளியான (20,670 கோடி டாலர் மதிப்புள்ள சொத்துகள் கொண்ட) ஜெஃப் பெசோஸைத் தொலைபேசியில் அழைத்து, இதைக் கைவிடுமாறு ட்ரம்ப் கெஞ்சினார். ஆனாலும் அதன் பங்கு விலை வீழ்ச்சியடைந்தது.

எனவே அமெரிக்கா சீனாவுடன் பேச வேண்டும், மிகக் கடுமையான வரிகளைத் திரும்பப் பெற வேண்டும், ஒரு தலைப்பட்சமான வரிகளை நிறுத்தித் தீர்வுகாண வேண்டும் என்ற குரல்கள் வலுத்து வருகின்றன.

இந்தச் சீர்கேடுகளை எதிர்த்து நாடெங்கிலும் அமெரிக்க மக்கள் வெகுண்டெழுந்துள்ளார்கள். லட்சம் பேருக்கு மேற்பட்டோர் பங்கேற்ற ஆர்ப்பாட்டங்கள், அமெரிக்காவின் பல மாநிலங்களில் நடந்துள்ளன.

மோடி, ட்ரம்பின் நெருங்கிய நண்பர்! ஆனாலும், தேசத்திற்கு ஆபத்து, மதத்திற்கு ஆபத்து என்றெல்லாம் மோடி வித்தை காண்பித்து அமெரிக்க மக்களை ட்ரம்ப் திசை திருப்ப முடியாது.

தொடர்புக்கு: 73971 30367

---

3 ஆம் பக்கத் தொடர்ச்சி



அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளைக் கண்டித்து மத்திய தொழிற்சங்கங்களின் அழைப்பின்படி மே 20ல் நடைபெற இருக்கும் வேலை நிறுத்தத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று தமிழ்நாட்டுத் தொழிலாளர்களுக்கும், கட்சி உறுப்பினர்களுக்கும் மாநிலக் குழு அறைகூவல் விடுத்தது.

## 100 நாள் வேலையை உறுதிப்படுத்துக:

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஒரு நாள் ஊதியத்தை ரூ.319ல் இருந்து ரூ.336 ஆக தமிழ்நாடு அரசு உயர்த்தி இருப்பதைப் பாராட்டியும், இந்தத் திட்டத்தில் பதிவு செய்துள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும், 100 நாள் வேலை தருவதை உறுதிப்படுத்தக் கோரியும், இதற்கு ஒன்றிய அரசு போதிய நிதி விடுவிக்க வலியுறுத்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## கோவில் மனை வாடகை:

கோவில் மனைகளில் குடியிருப்பவர்களுக்கு, தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள வாடகை அவர்களால் செலுத்த முடியாத அளவுக்கு மிக அதிகமாக இருப்பதைச் சுட்டிக்காட்டி, இதுகுறித்து கோவில் மனையில் குடியிருப்பவர்கள் சங்கம் தமிழ்நாடு முதல்வருக்குத் தந்துள்ள மனுவில் கோரியுள்ளவாறு, பழைய பகுதிமுறை அடிப்படையில் வாடகையை நிர்ணயித்துச் செயல்படுத்த வேண்டும் என்று தமிழ்நாடு அரசை மாநிலக் குழு வலியுறுத்தியது.

## நீட்டிலிருந்து விதிவிலக்கு:

நீட் தேர்வில் பங்கேற்ற மாணவர்களை அலங்கோலப்படுத்தி, அவமதித்து, மனித உரிமைகளை மீறும் செயல்களில் அதிகாரிகள் ஈடுபட்டதை மாநிலக் குழு கண்டித்தது. நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசை மாநிலக் குழு வலியுறுத்தியது.

# என்னை வார்த்தெடுத்த ஜனசக்தி



**தோழர் வ.சுப்பையா தமிழ் மாநிலக் கமிட்டியின் தலைமையகப் பொறுப்பிலிருந்தார். என்னைப் பார்த்ததும் அன்போடு வரவேற்று ஏற்கெனவே எதிர்பார்த்திருந்த ஒரு தோழர் வந்ததும் அவருக்கு வேலைப் பிரிவினை செய்து ஒதுக்குவது போல வந்த அன்றே என்னை ஜனசக்தியில் புரூப் ரீடராகப் பணியாற்றச் சொன்னார்.**

இரண்டு ஆண்டுகளுக்கு மேல் நான் அனுபவித்து வந்த நம்பிக்கை வறண்ட வாழ்க்கையில் பெருமழை பெய்து வெள்ளக்கடாக்கியது போல் இருந்தது தோழர் சுப்பையாவின் அன்பும் அரவணைப்பும்.

எனக்குக் கண்கள் கலங்கிப் போயின. பொதுவாக எங்கே போனாலும் அக்காலத்தில் என்னைக் கண்டதும் வீட்டுப் பெரியவர்கள் கேட்கும் கேள்வி, எங்கே வந்தாய்?' என்பதுதான்.

அதில், 'ஏன் வந்தாய்?' என்ற பொருளே அழுத்தம் பெற்றுத் தொனிக்கும். சில சமயங்களில் முன் வைத்த காலைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு திரும்பி ஓடியே வந்து விடுவேன்.

எங்கோ கூட்டத்துக்கு வந்த இடத்தில் 'உடனே ஜனசக்திக்கு வந்துவிடு' என்று எஸ்.ஆர்.கே கூறிய யோசனையைக் கேட்டு, கட்சித் தலைமைக்கு ஒரு கடிதம்கூட எழுதாமல் உணர்ச்சி வசத்தில் ஓடி வந்து நிற்கிற என்னை 'வாங்க கம்ரேட்' என்று தோழர் வி.எஸ். வரவேற்ற பண்பு கண்கலங்க வைத்ததில் வியப்பென்ன?

இதுவே என் வீடு. இவர்கள் என் உற்றார், உறவினர், பெற்றோர், சுற்றம் என்று நெஞ் சார உணர்ந்து விம்பினேன்.

ஜெயிலில் இருந்து எல்லாத் தோழர்களும் இன்னும் முற்றாக வெளிவந்து விடவில்லை.

தலைமறைவாய் இருந்த தோழர்களின் மீதிருந்த பிடிவாரண்டுகள் பல இன்னும் ரத்து செய்யப்படவில்லை.

மாவட்ட வாரியாகத் தோழர்களின்மீது தொடுக்கப்பட்ட கம்யூனிஸ்டு சதி வழக்குகள் எதுவும் வாபசாகிவிடவில்லை.

தூக்குமேடையில் தொங்குவதற்கு நாள் குறிக்கப்பட்டு நின்றிருக்கும் தோழர்களை விடுவிக்கிற இயக்கங்களும் ஓய்ந்துவிடவில்லை.

இந்நிலையில் முதல் பொதுத் தேர்தலுக்கான பணிகளில் கட்சித் தோழர்கள் முனைந்திருந்தனர்.

அடக்குமுறைக்கும், சித்திரவதைக்கும், கொடிய சிறைத்தண்டனைகளுக்கும் ஆளாகி வெளிவந்துள்ள கம்யூனிஸ்ட்களின்பால் சகல பகுதி மக்களுக்கும் ஆதரவும். அநுதாபமும் பெருகி இருந்தது.

தடை நீங்கி வெளிவந்த ஜனசக்தி பத்திரிகை என்றுமில்லா அளவு கூடுதல் பிரதிகள் விற்பனையாயின.

தற்போது வந்து கொண்டிருக்கிற வார இதழ் ஜனசக்தியின் நான்கு பக்கங்களைத்தான் தினசரியாக வெளிக்கொணர முடிந்தது.

பல்லாயிரக்கணக்கில் பெருகிவரும் ஜனசக்தி விற்பனைக்கு ஈடுகொடுக்க நமக்கு அச்சக வசதிகள் போதுமானதாயில்லை.

ராயப்பேட்டை அந்தோணித் தெருவில் உள்ள ஒரு நடுத்தரமான வீட்டில்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் தலைமையகமும், ஜனசக்தி பிரசுராலயமும், ஜனசக்தி அச்சகமும், மிஷின்களும், எங்கள் கம்யூனும் நாங்கள் வாழ்கிற இடமும் அமைந்து, நாங்கள் அனைவரும் ஒரு பெரும் கூட்டமாய் அதில் அடைந்து கிடந்தோம்.

பகலில் அலுவலகமாகப் பயன்படும் அறைகள் இரவில் மேஜைகள் இணை இணையாகப் போடப்பட்ட எங்கள் படுக்கையறையாக மாறி இருக்கும்.

விரைவில் ஜனசக்தியைப் பெரிய அளவு தினசரியாக மாற்றியே ஆக வேண்டும் என்கிற நிர்பந்தமும் ஏற்பட்டது.

எனவே, கம்யூனிஸ்டுகளாகிய எங்களுக்குப் பணிகளும் ஏராளமாயிருந்தன. தோழர்களும் ஏராளமாகத் தேவைப்பட்டனர்.

தோழர்கள் பாலதண்டாயுதம், எஸ்.ஆர்.கே, ஆர்.கே.பாண்டுரங்கன், ஆளவந்தார், என்.வி.கிரி, கே.முத்தையா, ஐ.மாயாண்டிபாரதி, முகவைராஜமாணிக்கம், சிங்கை பெ.சீனிவாசன், எம்.நாராயணன், வெங்கடேசன், கடைசியில் நான் ஆகிய இத்தனை தோழர்கள் ஜனசக்தி ஆசிரியர் குழுவில் சேர்த்து கொள்ளப்பட்டனர். விரைவில் தொடங்கவிருக்கும் பெரிய அளவு தினசரியை உத்தேசித்தே. இடம் போதாமையால் சித்தாரிப்பேட்டைக்கு ஜனசக்தி அச்சகத்தின் ஒருபிரிவும் ஆசிரியர் குழுவும் மாற்றப்பட்டது.



ஜனசக்தீ

தின இதழ்

ஆசிரியர்: ப.ஜீவானந்தம்.

இந்தியாவிற்கு போலந்து வாகன்கள்

பக்கம் 8 விலை 2 அணா இலங்கையில் 20 சதம் (விமானத் தபால்)

மலர் 13] சென்னை 14-10-56, துன்முகி புரட்டாசி—ஞாயிறு 29 (வெளியீடு 15-10-56 புரட்டாசி—திங்கள் 30) [இதழ் 59

அமரர் சங்கரலிங்கனார் ஆணை

மறைந்த தியாகிக்கு சர்வ கட்சியின் அஞ்சலி

சென்னை, அக். 14—

நவம்பர் முதல்நாள் புதிய தமிழக தினம் நாடெங்கும் கொண்டாடுக

அபாய எல்லைக்குமேல் யமுனா நதியில் வெள்ளம்

கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல்

அப்போது எங்கள் குழுவில் ஒருவராய் இருந்த தோழர் பாலன் தலைமறைவாயிருந்தார். அவரது தலைமறைவுப் பெயர் நாகராஜன். நாகராஜன் டென்டுக்கு போய் அவருடனிருந்து கட்டுரைகளை எழுதி வாங்கிக் கொண்டு வரும் வேலை என்னிடம் விடப்பட்டது.

அவரைக் கோடம்பாக்கம் ரயில் நிலையத்துக்குப் பின்னால் ஓர் ஆந்திரத் தோழரின் வீட்டு மாடியறையில் பெரிய மீசையும், ஜிப்பாவும், அணிந்த ஒரு புதிய தோற்றத்தில் மூன்றாண்டுகளுக்குப் பிறகு நான் சந்திக்க நேர்ந்தது.

எங்கள் ஆசிரியர் குழுக்கூட்டங்களும் பல சமயங்களில் அங்குதான் நடைபெறும்.

ஜனசக்தியில் புரூஃப் திருத்துகிற நேரம் போக மற்ற பொழுதுகளில் நான் தோழர் பாலனின் தலைமறைவு இடத்துக்கு ஏதாவது ஒரு வேலை வைத்துக் கொண்டு போய்விடுவேன். பல சமயங்களில் என்னோடு தோழர் கிரி வருவார்.

அங்கே அவர்கள் நிகழ்த்துகிற உரையாடல்களையும், சில சமயங்களில் அனல் பறக்க நடத்தும் விவாதங்களையும் கூர்ந்து பயின்ற அனுபவத்தால் எனது அறிவுச் சுடர் விடுவதை நானே உணர்ந்தேன்.

அவர்களைப்போன்ற நல்லாசான்களைத் தோழர்களாகப் பெற்றதைத்தான் பின்னாளில் நான் அடைந்த அடைந்து வருகின்ற புகழுக்கும், சாதனைக்கும் ஆதார அடிப்படை என்று நான் கருதுகிறேன்.

என்னுள் ஒளிந்து, உறங்கிக் கிடக்கிற எழுத்தாற்றலை ஊதி ஊதிக் கனலாய் வளர்த்தவர் என்று தோழர் கிரியை நான் அவதானித்திருக்கிறேன்.

'எழுது எழுதப்பா!' என்று அவர் சொல்கிற மந்திரவாசகங்கள் இப்போது என்னுள் ரீங்காரித்துச் சோர்வு நெரும்போதெல்லாம் எழுதத் தூண்டிய வண்ணமிருக்கிறது.

அதற்கும்மேல் பாலனின் முன்னால் கொண்டு போய் நிறுத்தி, "பாலன்! நீங்கள் சொல்லுங்கள். நம்ம சின்னப்பையன் எப்பவுமே சின்னப் பையனா இருக்கலாமா?

புரூஃப் பாக்கறதோட உன்புரட்சிவேலை முடிஞ்சிட்டதா நெனைக்கிறாயா?









இதைப்படி.... இதைத் தெரிந்து கொள்... தெரியாததைக் கேள்... நாங்கள் கற்றதும், கற்றுக் கொள்வதும் ஒரு கூட்டு முயற்சியே...

நீ இப்படிப் புரூஃப் ரீடராகத் தேங்கி நிற்க நாங்க விடமாட்டோம்..." என்று அன்பு கலந்த தோழமையுடன் என்னை நன்கு உருக்கி, வார்த்துப் புதிய வார்ப்பாகத் தட்டி உருவாக்கியவர்கள் தோழர்கள் கிரியும், பாலதண்டாயுதமும், ஆர்.கே.பி.யும், என்றால் அந்தப் புதிய மனிதனுக்குத் தமிழாற்றல் எனும் பொன்மகுடம் சூட்டித் தலைநிமிர வைத்தவர் எங்கள் அலுவலகத்துக்கு அடிக்கடி வந்து போகும் கவிஞர் தமிழ்ஒளி என்பதையும் நான் மறந்து விட மாட்டேன்.

நடந்து முடிந்த முதல் பொதுத்தேர்தலில் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட ஐக்கிய முன்னணி பேராதரவு பெற்றதும், வங்காளத்துக்கு அடுத்தபடி இந்தியாவிலே கம்யூனிஸ்ட் கட்சியின் வலுமிக்கத் தளமாக, சென்னை மாநிலம் திகழ்ந்ததும் ஜனசக்தி தினசரியாகவும், பெரிய அளவிலும் வருவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கிற்று.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்தியத் தலைமைப் பீடமாக எங்கள் அலுவலகம் ஏற்றமும் பொலிவும் பெற்றது.

மவுண்ட்ரோடில் டிவிஎஸ் நிறுவனத்துக்குப் பக்கத்தில் சுபோதையா பில்டிங்ஸ் என்னும் பெரிய இடத்துக்கு ஜனசக்தி மாற்றப்பட்டது. எங்கள் வெகுநாளைய லட்சியமான ஜனசக்தி தினசரி ஜெய கோஷத்துடன் பவனி வந்தது.

இவ்விடைக்காலத்தில் நான் எப்போதாகிலும் கதைகள் எழுதித் தோழர்களுக்குப் படித்துக் காட்டி வந்தேன்.

பிரசுரிக்கவோ பத்திரிகைகளுக்கு அனுப்பவோ நான் முயன்றதில்லை. ஜனசக்தியில் எழுதுகிற அளவுக்கு நான் வளர்ச்சி பெறவில்லை என்று நான் உணர்ந்திருந்தேன்.

அப்போது சென்னையில் அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஒன்று அமைக்கும் முயற்சியில் தோழர்கள் ஈடுபட்டிருந்தோம்.

அந்தக் கூட்டங்களில் எனக்கு அறிமுகமானவர் நாரண. துரைக்கண்ணன் அவர்கள். புகழ்பெரும் பத்திரிகையான பிரசண்ட விகடனின் ஆசிரியராயிருந்தார்.

நீங்கள் கதைஎழுதுகிறீர்களாமே! உங்கள் கூட்டத்தில் கதை எழுதுகிறவர்களும் உண்டா?" என்று வேடிக்கையாகக் கேட்டார். அப்போது எங்களுடன் தமிழ் ஒளியும் இருந்தார்.

அன்று நான் அவருக்குப் படித்துக் காட்டிய கதை ஒன்றை அப்போதே என்னிடமிருந்து வாங்கி நாரண. துரைக்கண்ணனிடம் கொடுத்தார்.

பிரசண்ட விகடன் பத்திரிகையில் அவ்வப்போது நான் சிறுகதை எழுதி அவை அச்சில் வெளிவருவது கண்டு அடைந்த குதூகலம் தவிர கதைக்குச் சன்மானம் பெறுகிற குதூகலத்தைத்தான் தரும் பொருளாதார வசதியுடன் அந்தப் பத்திரிகை இருக்கவில்லை.

எனக்கு முன்னால் தமிழகத்தில் எழுத வந்த எழுத்தாளர்களில் பெரும்பான்மையானவர்கள் பிரசண்ட விகடனில் எழுதியிருக்கிறார்கள்.

அது ஒரு காலத்தில் மிகப் பிரபலமாக விளங்கிய தமிழ்ப் பத்திரிகையாய்த்தானிருந்தது.

அக்காலத்தில் எழுதுவர்களுக்குப் பிரசண்ட விகடன் சன்மானம் வழங்கியிருக்கும்.

நான் எழுதப் போன காலத்தில் அது மிகவும் தளர்வுற்று அந்திமக்காலத்தில் உயிருக்குப் போராடி வாழ்ந்து கொண்டிருந்தது.

எனவே, துரைக்கண்ணிடம் சொல்லி உனக்கு ஏதும் சன்மானம் வாங்கித் தருகிறேன்!'

என்று தமிழ்ஒளி என்னிடம் கூறியபோது அதை நான், 'வேண்டாம் ' என்று தடுத்து விட்டேன்.

– பிரசண்ட விகடனில்

**த.ஜெயகாந்தன்**

# பயங்கரவாதத்திற்கு எதிராக தேசிய அளவில் கருத்தொற்றுமை ஏற்படுத்த வேண்டும்

## ஒன்றிய அரசுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

அனைத்துக்கட்சிக் கூட்டத்தை நடத்தி பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் தேசிய அளவிலான கருத்தொற்றுமை ஏற்படுத்தும் வகையில் அனைத்துக்கட்சிக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது. இதுதொடர்பாக கட்சியின் தேசியச் செயலகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத உள்கட்டமைப்புகளைக் குறிவைத்து இந்திய ராணுவம் நடத்திய செந்தூர் நடவடிக்கைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது. பகல்காமில் நடந்த கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலில் இந்தியர்கள் 25 பேரையும் நேபாள நாட்டவர் ஒருவரின் உயிரையும் பறித்ததன் தொடர்ச்சியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அப்பாவி உயிர்களைப் பறித்ததுடன், ஆத்திரமூட்டும் செயல்பாடுகளுக்கு காரணமான பயங்கரவாதத்தின் அடித்தளங்களுக்கு எதிராக இந்த நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர இந்தியாவுக்கு வேறு வழியில்லை என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. பாகிஸ்தான் இராணுவ சொத்துகளைத் தவிர்த்து விட்டு, பயங்கரவாத உள்கட்டமைப்புகளில் மட்டும் கவனம் செலுத்துவதை இந்த நடவடிக்கைகள் இலக்காகக் கொண்டிருந்தது, முழு அளவிலான மோதலைத் தவிர்ப்பதுடன் பொறுப்புக்கூறலுக்கு இந்திய இராணுவம் முன்னுரிமை அளித்துள்ளது.

அதேநேரத்தில், பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் தேசிய அளவில் கருத்தொற்றுமையையும் கூட்டு செயல்பாடுகளையும் வலுப்படுத்த அனைத்துக்கட்சிக் கூட்டத்தை உடனடியாகக் கூட்ட வேண்டும் என ஒன்றிய அரசிடம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. மேலும் மோதலைத் தடுக்கவும், நமது பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்தவும், அரசியல் தீர்வுகளை எட்டவும் ராஜதந்திர வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம்.

பயங்கரவாதத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் அரசு, தங்கள்நாட்டில்செயல்பட்டுவரும் அனைத்து பயங்கரவாத கட்டமைப்புகளையும் அகற்ற வேண்டும் என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொள்கிறது. வன்முறையின் சுழற்சியை முடிவுக்கு கொண்டுவந்து, மக்களின் பாதுகாப்பையும் நீண்டகால அமைதியையும் பிராந்திய அளவிலான கூட்டு நடவடிக்கைகளே உறுதி செய்யும்.

இந்திய மக்களின் ஒற்றுமை, வலிமை, நீதியைப் பெற்றுத்தருவதில் அசைக்க முடியாத உறுதி, மற்றும் மதச்சார்பற்ற மதிப்பீடுகளின் ஆகியவற்றின் தருணமாக இன்றைய சூழல் அமைகிறது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலகம் தெரிவித்துள்ளது.

## செந்தூர் நடவடிக்கைக்கு தமிழ்நாடு மாநிலக் குழு வாழ்த்து!

இந்திய ராணுவத்தின் செந்தூர் நடவடிக்கைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இந்திய ராணுவம் மே 6 ஆம் தேதி இரவு செந்தூர் நடவடிக்கையைத் தொடங்கி, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீர் பகுதிகளில், பயங்கரவாதிகள் அமைத்திருந்த ஒன்பது முகாம்கள் மீது தாக்குதல் நடத்தி அழித்தொழித்து இருக்கிறது. இதில் 70 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். 24 ஏவுகணை தாக்குதல் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 22 ஆம் தேதி பகல்ஹாம் பகுதியில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி 25 சுற்றுலாப் பயணிகள் மற்றும் ஒரு உள்ளூர்வாசி உட்பட 26 பேர் கொடூரமாக கொல்லப்பட்டத்திற்கு உறுதியான பதிலடி கொடுக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதிகள் முகாம்களை மட்டும் துல்லியமாக குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல் இந்திய ராணுவத்தின் திறனுக்கும், ஆற்றலுக்கும் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

பாகிஸ்தான் பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுவது உண்மை எனில், இந்திய ராணுவத்தின் செந்தூர் நடவடிக்கை மீது எதிர்மறை கருத்துக்களை வெளியிடுவதை தவிர்க்க வேண்டும்.

பயங்கரவாதத்துக்குப் பாலூட்டி வளர்க்கும் பாகிஸ்தானின் செயலைத் தடுக்க சர்வதேச சமூகத்தின் ஒரு முகமான கருத்தைத் திரட்ட வேண்டும். இது மட்டும் அல்லாமல் அனைத்து அரசியல் கட்சிகள் கூட்டத்தை நடத்தி, கருத்திணக்கத்தை உருவாக்கி, நாடு ஒரு முகமாக பயங்கரவாதத்திற்கு எதிராக உறுதியுடன் போராடும் என்பதை அறிவிக்க வேண்டும்.

## மே 5 மாமேதை காரல் மார்க்ஸ் பிறந்த தினத்தில்

# அறிவியல் பூர்வமாகக் கணக்கிட்டு குறைந்தபட்ச ஊதியம் கோரி பெருந்திரள் ஆர்ப்பாட்டம்



மே 5 மாமேதை காரல் மார்க்ஸ் பிறந்த தினம் அறிவியல் பூர்வமாகக் குறைந்தபட்ச ஊதியம் கணக்கிட்டு வழங்க ஒன்றிய மாநில அரசுகளை வலியுறுத்தும் கோரிக்கை தினம் கவன ஈர்ப்புப் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

செங்கல்பட்டுமாவட்டம்மறைமலைநகர் அண்ணா சாலையில், குறைந்தபட்ச ஊதியம் அறிவியல் பூர்வமாகப் பகுத்தறிவுக்குப் பொருந்தும் வகையில் கணக்கிட்டு உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் இப்பகுதியில் உள்ள விர்கோ பாலிமர், ஊரி ஆட்டோமேட்டிவ்ஸ் நிர்வாகங்களின் தொழிலாளர் விரோத, சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட தலைவர் வி.சங்கையா தலைமையில்மாவட்டப்பொதுச்செயலாளர் எம்.ஜஹாங்கீர் ஆர்ப்பாட்டத்தைத் துவக்கி வைத்தார். மாநிலப் பொதுச் செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன் போராட்டத்தின் நோக்கங்கள் மற்றும் அதன் அவசியம் குறித்து விளக்கமாகப் பேசி சிறப்புரையாற்றினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் எ.ராஜ்குமார் நிறைவுரையாற்றி முடித்து வைத்தார். கட்டடச் சங்க மாவட்டச் செயலாளர் வி.வீராசாமி போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துப் பேசினார். செக் பாய்ண்ட் சங்கச் செயலாளர் வி.உமாபதி முன்னிலையில் ஊரி சங்கச் செயலாளர் எம்.ராமு வரவேற்க விர்கோ பாலிமர் தொழிற்சங்கச் செயலாளர் வி.குமரவேல் நன்றி கூறி நிறைவு செய்தார். ஆர்ப்பாட்டத்தில் மேற்குறிப்பிட்ட தொழிற்சங்கங்களைச் சார்ந்த பெண்கள் உட்பட திரளாகக் கலந்து கொண்டனர்.

விர்கோ நிர்வாகத்தால் கடந்த 55 நாட்களுக்கு மேலாக வேலை வழங்காமல் மறுக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உடனடியாக வேலை வழங்க வேண்டியும், 24 மாதங்கள் கடந்த பின்பு தொழிற்சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி ஊதிய உயர்வு ஒப்பந்தம் காண மறுக்கும் ஊரி ஆட்டோமேட்டிவ்ஸ் நிர்வாகத்தைக் கண்டித்தும், குறைந்தபட்ச ஊதியம் வாழ்க்கை சூழ்நிலைக்கேற்பக் கணக்கிட்டு அனைத்துத்துறைகளுக்கும் வழங்க வேண்டும் என்று மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினார்கள்.

தோழர் எம்.ராதாகிருஷ்ணன் தனது உரையில், தொழிலாளர்களுக்கு மாறுபடும் காலச் சூழல், தொழில் நுட்ப வளர்ச்சி, வாழ்க்கைக்கான அடிப்படை மற்றும் அத்தியாவசியத் தேவைகளையும் கணக்கிட்டு, அறிவியல் பூர்வமாகப் பகுத்தாய்ந்து தற்போது நடைமுறையிலுள்ள குறைந்தபட்ச ஊதியத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட அளவீடுகளை மத்திய, மாநில அரசுகள் அனைத்துத் துறைகளிலும் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் உயர்த்தி வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி ஏஐடியுசி கோரிக்கை தினமாக அறிவித்துள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள குறைந்தபட்ச ஊதிய கணக்கீடு என்பது நடைமுறை வாழ்க்கைக்கு உகந்தது அல்ல என்பதையும் சம்பாதிக்கும் ஒருவருடன் மூன்று பேர் என்று கணக்கிடப்பட்டுள்ள அதன் அளவீடு குறைபாடுகளையும், உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி பெற்றோர்களையும் பாதுகாக்க வேண்டிய அவசியமும், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் தேவை, இன்றைக்கு அரசின் ஆதார் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு செல்போன் அவசியம் மற்றும் டி.வி போன்ற நவீனத் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவையாக மாறிவிட்ட காரணத்தினால் இவற்றையெல்லாம் கணக்கிட்டு அறிவியல் பூர்வமாகப் பகுத்தாய்ந்து பகுத்தறிவுக்குப் பொருந்துகின்ற வகையில் உயர்த்திட வேண்டும்.

மாமேதை காரல் மார்க்ஸ் அவர்கள் தொழிலாளர்களின் உரிமைக்காக வகுத்தளித்த நெறிமுறைகளின் படி தொழிலாளி தனது வாழ்வதற்கான ஊதியத்தைப் பெறுவதற்கான வழிமுறைகளைக் கணக்கிட்டு உயர்த்தி நிர்ணயித்து அமலாக்க வேண்டும் என்றார்.




## விருப்பமில்லாத் திடீர்த் திருப்பம் பாஜக அரசின் சாதிவாரிக் கணக்கெடுப்பு




கடந்த ஏப்ரல் 30, 2025 அன்று ஒன்றிய அமைச்சரவை கூடி மக்கள் தொகை கணக்கெடுப்பை சாதி வாரியாக மேற்கொள்வது என்ற கொள்கை முடிவை அறிவித்தது.

பாரதிய ஜனதா கட்சி தவிர அனைத்துக் கட்சிகளும், ஏன் பாரதிய ஜனதா கட்சியின் கூட்டணிக் கட்சிகளும் கூட இதை ஆதரித்துப் பேசின. தமிழ்நாடு சட்டமன்றமும் ஜாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பைக் கோரி தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி இதனை நாடாளுமன்றத்திலும், வெளியிலும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இதனை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று தனது கருத்தை வலியுறுத்தி வந்தது

இந்நிலையில் பிரதமர் மோடி இது நாட்டு மக்களைப் பிளவு படுத்தி விடும் என்று கூறியதும், கடந்த 2014ஆம் ஆண்டு பாஜக அரசு பதவியேற்ற பிறகு அந்தக் கட்சி ஜாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு கோரிக்கையைக் கடுமையாக எதிர்த்தது. இது தேச நலனுக்கு எதிரான கோரிக்கை, அர்பன் நக்ஸல்களின் கோரிக்கை என்றெல்லாம் பிரதமரே பேசினார். ஆர்.எஸ்.எஸ் இட ஒதுக்கீட்டையே மறு விவாதத்திற்கு உட்படுத்த வேண்டும் என்றெல்லாம் பேசியது. இந்நிலையில் திடீரென பாஜக அரசு இந்த முடிவை எடுத்திருப்பது ஏன்? பீஹார் மாநிலத் தேர்தலுக்கா? இந்தியா கூட்டணிக் கட்சிகளைச் சமாளிக்கவா? என்ற கேள்விகள் எழுவது இயல்பே!

எந்தக் கோரிக்கையும் எழாமல், கணக்கெடுப்பும் நடத்தாமல் உயர்சாதி அரிய வகை ஏழைகளுக்குத் திடீரென 10 சத இட ஒதுக்கீட்டை, கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் அளித்தது மோடி அரசு! மக்கள் தொகைக் கணக்கெடுப்பைச் சாதி வாரியாகக் கணக்கெடுத்தால் அனைத்துச் சாதிகளின் எண்ணிக்கை குறிப்பாக பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், பழங்குடியினர், பட்டியல் சாதியினர் எண்ணிக்கை பலம் தெரிந்துவிடும். மிகக் குறைவாக இருக்கும் உயர் சாதியினருக்கு 10% என்றால் இவர்களும் அவரவர்கள் சதவீதத்துக்கு ஏற்ப இட ஒதுக்கீடு கோரிக்கை எழும். அப்படி வந்தால் தாங்கள் அடித்தளமாக நம்பும் உயர் சாதி வர்ணக் கோட்பாடு அதன் ஆதிக்கம் பாதிப்புக்கு உள்ளாகும் என்ற காரணத்தால்தான் இவ்வளவு காலம் தாழ்த்தினர். இப்போதும் கூட இதனை ஒரு சூழ்ச்சியாகத்தான் அறிவித்திருக்கிறார்கள் என்பதே உண்மை!

எப்படி பெண்களுக்கான இட ஒதுக்கீடு 33 சதத்தை கடந்த நாடாளுமன்ற அமர்வின் கடைசிக் காலத்தில் முடிவெடுத்து அறிவித்தார்களோ அதுபோலவே இதுவும் அமைந்துவிடும். இன்னும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிவிக்கை வரவில்லை கொரோனா முடிந்து இத்தனை ஆண்டுகள் ஆகியும் உலக நாடுகளின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை எடுத்து முடித்தும் இந்தியா எடுக்காமல் இருப்பதற்குக் காரணம் இதுதான் என்பது விளங்கும்!

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தி அதன் வாயிலாக தொகுதி மறு வரைவுகள் நிகழ்த்தப்பட்டு, பெண்களுக்கான இட ஒதுக்கீடு, நாடாளுமன்ற, சட்டமன்ற அவைகளில் வழங்கப்படுமாம். அதுபோலவே சாதிவாரிக் கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு, அவைகள் ஆய்வு செய்யப்பட்டு, நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்படும் என்பதாகத்தான் இந்த அறிவிப்புகள் இருக்கின்றன. அப்படி எனில் சாதிவாரிக் கணக்கெடுப்பு எடுக்கப்பட்ட பிறகு 100 விழுக்காடு இட ஒதுக்கீடு, அவரவர் எண்ணிக்கைக்குத் தகுந்த இட ஒதுக்கீடு என்ற முறையை ஒன்றிய அரசு கொண்டு வருமா? அதில் ஏன் சுணக்கம் காட்ட வேண்டும்? இதனையும் சேர்த்து அறிவிக்க வேண்டியது தானே?

தாமதப்படுத்தப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதிக்கு சமம்! சில மாதங்களுக்கு முன்பு நேரடி நியமன முறையில் இந்திய அரசுத் துறைகளில் முதன்மை அதிகாரிகள் 45 பேரை மோடி அரசு அறிவித்தது. அதில் ஒருவர் கூட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது பட்டியல் இனத்தைச் சார்ந்தவர்கள் எவருமில்லை. ஒன்றிய அரசின் ஊன்றுகோலான நிதிஷ்குமார் சந்திரபாபு நாயுடு எதிர்த்த பிறகுதான் அதைத் திரும்பப் பெற்றது. இப்படிக் கிடைக்கிற இடங்களில் எல்லாம் சமூக நீதியைச் சவக்குழிக்கு அனுப்பியவர்கள்தான் இன்று திடீரெனப் பின்வாங்கி சாதிவாரிக் கணக்கு எடுப்போம் என்கிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ் பாஜக ஒன்றிய அரசு சமூக நீதியை மக்கள் எழுச்சி சமாளிப்பதற்காக பயன்படுத்துகிறார்கள் என்பது மட்டும் திண்ணம்!

**த/லெ**



**வ.மணிமாறன்**

# வெறுப்பு அர



**மதுரை ஆதீனம் தான் சென்ற கார் மீது மோதி, தன்னைக் கொல்ல சதி நடப்பதாக பேசியது பச்சைப் பொய் என்பது அம்பலமாகி இருக்கிறது. வெறுப்பு அரசியலையும் மதப் பிளவு வாதத்தையும் பொய்களின் மூலம் பொதுவெளியில் ஆதீனமே பரப்பியது அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.**

அனைத்துலக சைவ சித்தாந்த ஆறாவது மாநாடு, சென்னை, காட்டாங்கொளத்தூரில் உள்ள எஸ்ஆர்எம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. தருமபுரம் ஆதீனமும் எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய இந்த மாநாடு, மே மூன்றாம் தேதி தொடங்கியது. மூன்று நாட்கள் நடைபெற்றது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக, மே இரண்டாம் தேதி ஃபார்ச்சூனர் சொகுசுக்காரில் மதுரை ஆதீனம் சென்னைக்குச் சென்று கொண்டிருந்தார். உளுந்தூர்பேட்டை அருகே வந்த போது அவருடைய சொகுசுக்கார் மீது மற்றொரு கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும் அதில் ஆதீனம் உயிர் தப்பினார் என்றும் செய்திகள் வெளியாயின.

சென்னை சென்றடைந்த மதுரை ஆதீனம், மே மூன்றாம் தேதி தொடங்கிய சைவ சித்தாந்த மாநாட்டில் பேசினார். அப்போது, “என்னைக் கொல்ல சதி நடக்கிறது” என்று கார் விபத்து குறித்து அவர் பேசியவுடன் அதிர்வலைகள் ஏற்பட்டன. பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மதுரை ஆதீனம், “சென்னை வந்துகொண்டிருந்த போது, உளுந்தூர்பேட்டை ரவுண்டானாவை கடந்த போது “மற்றொரு கார் மோதிவிட்டு நிற்காமல் சென்று விட்டது. இதில் எங்களுடைய கார் சேதமடைந்ததுடன் நான் நிலைகுலைந்து விட்டேன்” என்றார்.

தன்னைக் கொல்ல முயன்றவர்கள் “தொப்பி, தாடி வைத்திருந்தனர்” என்றும் மதுரை ஆதீனம் கூறினார். அவருடன் இருந்த மற்றொருவர், “காரில் வந்த இரண்டு பேருமே இஸ்லாமியர்கள்தான். அவர்களின் காரில் பதிவு எண் (நம்பர் பிளேட்) இல்லை. வேகத்தடுப்புகளை (பேரிகாட்) உடைத்துக்கொண்டு வேகமாக வந்து ஆதீனத்தின் காரை மோத முயன்றனர். இது திட்டமிட்ட சதி” என்று குற்றம்சாட்டினார்.

“காவல்நிலையத்தில் புகார் அளித்தீர்களா?” என்று செய்தியாளர்கள் கேட்டனர்.

“சிவபெருமானிடம் புகார் கொடுத்திருக்கேன்” என்று மதுரை ஆதீனம் கூறினார்.

அதாவது, காவல்நிலையத்திலோ காவல்துறையிலோ அவர் புகாரும் கொடுக்கவில்லை. தகவலும் தரவில்லை.

ஆனால், மதுரை ஆதீனம் பேசிய செய்தி வெளியானவுடன், கண்காணிப்புக் கருவிகளில் (சிசிடிவி) பதிவான காணொளி காட்சியையும், அங்கு என்ன நடந்தது என்பது குறித்த அறிக்கையையும் காவல்துறை வெளியிட்டது.

சிசிடிவி காணொளியையும் காவல்துறையின்



**பா.ஜீவசுந்தரி**

# எக்காலத்தும் வீழா

## நூற்றாண்டுச் சிறப்புக் கட்டுரை

**இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் NFIW (National Federarion of Indian Women) தலைவராக 1976 முதல் 1980 வரையிலும், 1980 முதல் 1984 வரை கௌரவத் தலைவராகவும் என இரு முறை தேர்வு செய்யப்பட்டுத் திறம்படச் செயல்பட்டவர் ராஜம் கிருஷ்ணன்.**

இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பிரதிநிதியாகப் பல நாடுகளுக்கும் சென்று வந்துள்ளார். அங்கெல்லாம் பெண்களின் பல்வேறு பிரச்சனைகள் குறித்தும் குரல் எழுப்பியுள்ளார். 1976ஆம் ஆண்டு ‘வளைக்கரம்’ நாவலுக்கு சோவியத் லாண்ட் நேரு விருது பெற்றதற்காக சோவியத் நாட்டுக்குச் சென்று வந்தார். 1979ல் சோவியத் ஒன்றிய அரசின் அழைப்பின் பேரில் சென்ற மூவர் தூதுக் குழுவில் ஒருவராகவும் மீண்டும் மாஸ்கோ சென்று வந்தார்.

1983ஆம் ஆண்டு அனைத்துலக சமாதான காங்கிரஸ், செக் நாட்டின் தலைநகரான பிராக்ஸ் நகரில் நடைபெற்றது. இம்மாநாட்டில் ராஜம் கிருஷ்ணன் கலந்து கொள்வதற்குக் காரணமாக இருந்தவர், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தைத் துவக்கியவர்களில் ஒருவரும் முதுபெரும் தலைவருமான அருணா ஆசிஃப் அலி அவர்கள்.

இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் கூட்டங்கள் என்றால் பெரும்பாலும் தவறாமல் ஆஜராகி விடுவார். வர இயலாத நிலை எனில், அதையும் முறையாகத் தெரியப்படுத்திவிடுவார். பெண்களுக்கு எதிரான முக்கியமான பிரச்சனைகள் எனில், பாலன் இல்லத்தில் நடைபெறும் கூட்டங்களில் அவரைத் தவறாமல் பார்க்கலாம்; அந்தக் கூட்டம் எப்போதும் அனல் பறக்கத்தான் இருக்கும்.



### 1990 மார்ச் 8 மகளிர் தினம்

பெரும்பாலும் இடதுசாரி இயக்கப் பெண்கள் மட்டும்தான் மகளிர் தினத்தை எப்போதும் அனுசரிப்போம். இப்போது போல வியாபார நிறுவனங்கள் முழுமையாக மகளிர்

## மதுரை ஆதீனம் சொன்ன பொய்கள்

# ரசியலை விதைக்கும் முயற்சி அம்பலம்



அறிக்கையையும் கண்ட மதுரை ஆதீனமும் அவருடன் சுற்றிக்கொண்டிருந்த எடுபிடிகளும் பதறிவிட்டனர்.

உளுந்தூர்ப்பேட்டை மேம்பாலத்தின் கீழ் சர்வீஸ் சாலையில், ஆதீனத்தின் ஃபார்ச்சூனர் சொகுசுக் கார் அதிவேகமாகச் செல்கிறது. மற்றொரு திசையில் இருந்து சாலைத் தடுப்புகளைக் (பேரிகாட்) கடந்து மாருதிக்கார் வருகிறது. ஆதீனத்தின் பெரிய பார், பக்கவாட்டிலிருந்து வந்த சின்னக் காரை உரசியவாறு செல்கிறது. பின்னர், மாருதிக் காரை நிறுத்திவிட்டு அதில் இருந்தவர்கள் இறங்கி வருகின்றனர். ஆதீனத்தின் காரில் இருந்து ஒருவர் இறங்கிச் செல்கிறார். இரண்டு தரப்பும் பேசுகின்றனர். விபத்து குறித்து ஒருவர் மீது ஒருவர் குற்றம்சாட்டிப் பேசியிருக்கலாம். பிறகு கலைந்து செல்கின்றனர். இவைதான் காவல்துறை வெளியிட்ட சிசிடிவி காணொளியில் இருப்பவை.

ஆதீனம் இருந்த கார் அதிவேகமாகச் சென்றதுதான் விபத்துக்கு காரணம் என்றும் இதில் கொலை முயற்சி எதுவும் இல்லை என்றும் காவல்துறை அறிக்கை குறிப்பிடுகிறது. இதற்கு சிசிடிவி காட்சியே போதுமானது. .

பார்ச்சூன் சொகுசுக் காரில் செல்பவரை சாதாரண மாருதிக் கார் மூலம் மோதி கொல்ல சதி என்று சொல்வதை யார் நம்புவார்?

ஆதீனங்கள் இந்த உலக வாழ்வின் பற்றுகளையும் விருப்பு வெறுப்புகளையும் கடந்தவர்கள். தவ வாழ்க்கை வாழ்பவர்கள் என்று அவர்கள் பேசி வருகின்றனர். மக்களும் நம்புகின்றனர். அப்படிப்பட்டவர்களில் ஒருவரான மதுரை ஆதீனம் இப்படிப் பொய்யைப் பரப்புவது ஏன்?

இதற்கானப் பதில், மதுரை ஆதீனம் செய்தியாளர்களிடம் பேசியதன் இறுதியில் இருக்கிறது.

"புகார் கொடுத்தீர்களா?" செய்தியாளரின் கேள்வி.

"சிவபெருமானிடம் புகார் கொடுத்திருக்கேன்" மதுரை ஆதீனத்தின் பதில்.

அதாவது, ஆதீனங்கள் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள். அவர்கள் சிவபெருமானிடம் மட்டுமே பேசுவார்கள். அற்ப உலக வாழ்வில் இருக்கும் இருப்பவர்களிடம் எல்லாம் பேச மாட்டார்கள் என்று தன்னை மேலான நிலையில் நிறுத்திக்கொள்ள மதுரை ஆதீனம் முயல்கிறார்.

அடுத்து, "சிறுபான்மையினருக்குத் தானே சலுகைகள். அத்தனை சலுகைகளும் அங்க தானே போகுது" என்று வாயையும் உடலையும் கோணிக்கொண்டு, எள்ளலும் எகத்தாளமுமான உடல் மொழியுடன் பேசுகிறார்.

சங்கிகளின் வெறுப்பு அரசியல் இது.

இந்த வெறுப்பு அரசியல் ஆதீனத்தின் சிந்தனையை ஆக்கிரமித்துள்ளது. மூளையில்நிரம்பிவழிகிறது.இது ஆதீனத்தை சுவாதீனம் அற்றவராக்கிவிட்டது.

அனைத்துலகசைவசித்தாந்தமாநாட்டின் முதல் நாள், பாஜகவின் அகில இந்தியத் தலைவர் ஜெ.பி.நட்டா, சனாதனத்தை மொத்த குத்தகைக்கு எடுத்தவரும் தமிழ்நாட்டின் தபால்காரருமான ஆளுநர் ஆர்.என்.ரவி மேடையில் இருக்கின்றனர். அப்பொழுது மதுரை ஆதீனம் விட்ட கதைகள்தான் இவை.

"தன்னைக் கொல்ல சதி நடக்கிறது. சமூகப் பிரச்சனைகள் குறித்து தொடர்ந்து கருத்துக் கூறி வருவதால், வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்கள் என்னைக் கொல்ல திட்டமிட்டிருக்கலாம்" என்று அபாண்டமாக அவர் பேசுகிறார்.

இஸ்லாமிய வெறுப்பையும் மதவெறி அரசியலையும் தமிழ்நாட்டில் அரங்கேற்றலாம். இந்தியா அளவில் பேசுபொருளாக மாற்றிவிடலாம். இதை எல்லாம் கணக்கிட்டு ஆதீனம் சொன்ன பொய்தான் இது.

காவல்துறை வெளியிட்ட சிசிடிவி காட்சி அவர்களின் திட்டத்தில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டது.

இந்த விவகாரம் ஆதீனத்தின் கார் ஓட்டுநர் அதிகவேகமாகச் சென்றார் என்று வழக்குப் போட்டு, அபராதம் விதிப்பதோடு முடிந்துவிடக்கூடியது அல்ல.

வெறுப்பு அரசியலையும் மதப் பிளவு வாதத்தையும் பச்சைப் பொய்களின் மூலம் பொதுவெளியில் பரப்பிய, சமூக அமைதியை சீர்குலைக்க முயன்ற மதுரை ஆதீனம் போன்றவர்கள் மீது தமிழ்நாடு அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆதீனங்கள் சட்டத்துக்கு அப்பாற்றபட்டவர்கள் அல்ல என்பது உறுதி செய்யப்பட வேண்டும். தமிழ்நாடு அரசு இதனை அமைதியாக கடந்துசெல்லக் கூடாது.

### சதியாக மாற்றப்பட்ட விபத்து

- மே 2 ஆம் தேதி, பகல் 11.28 மணிக்கு தினமலர் வெளியிட்ட டுவிட்டர் (எக்ஸ் தளம்) செய்தியில், "ஆதினம் உயிர் தப்பினார்! உளுந்தூர்பேட்டை அருகே மதுரை ஆதினம் சென்ற வாகனம் மீது இன்னொரு வாகனம் மோதல். ஆதினம் உயிர் தப்பினார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- மே 3 இரவு 12.22 மணிக்கு அதே தினமலர் வெளியிட்ட டுவிட்டர் செய்தி, "என்னைக் கொல்ல சதி நடக்கிறது – மதுரை ஆதினம் அதிர்ச்சி" என்ற தலைப்பில், "சென்னையில் நடந்த அனைத்துலக சைவ சித்தாந்த மாநாட்டில் பேசிய மதுரை ஆதினம், "என்னை கொலை செய்ய சதி முயற்சி நடக்கிறது. மீனாட்சி சுந்தரேஸ்வரர்தான் என்னைக் காப்பாற்றினார்" என்றார். நேற்று (மே 2) நடந்த வாகன விபத்து குறிப்பிட்டு இவ்வாறு அவர் பேசினார்" என்று குறிப்பிட்டுள்ளது.

---

# வர் ராஜம் கிருஷ்ணன்

தினத்தைக் கையகப்படுத்திக் கொண்டு கபளீகரம் செய்ய ஆரம்பிக்கவில்லை. கூட்டங்கள், ஊர்வலங்கள் என எப்போதும் அந்த நாள் பரபரப்பாகவே இருக்கும்.

அன்று காலையிலேயே 'தினமலர்' பத்திரிகை முதல் பக்கத்தில் ஒரு பெரிய கறுப்பு வெள்ளைப் புகைப்படத்தை வெளியிட்டிருந்தது. வயதில் முதிர்ந்த ஒரு பெண் சாராயக் கடைக்குச் சென்று சரக்கு வாங்கிக் கொண்டிருப்பதான படம் அது. அந்த வயதான பெண்ணும் ஒரு கூலித் தொழிலாளியாகத்தான் அந்தப் புகைப்படத்தில் தெரிந்தார். அதற்குத் தலைப்பு 'இதுதான் மகளிர் தினம்'. அதைப் பார்த்துவிட்டுக் காலையிலேயே தொலைபேசியில் அழைத்துக் கடுமையாகப் பேசினார். பத்திரிகை அலுவலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டுமென்றும் கொந்தளித்தார். அந்தந்தப் பகுதிகளில் இருக்கும் தோழர்கள் 'தினமலர்' பத்திரிகையைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

ராஜம் கிருஷ்ணன் அதில் கலந்துகொண்டு கடுமையாகப் பேசினார். 'கடினமான உடல் உழைப்பைச் செலுத்தக்கூடிய பெண்ணாகவும் அவர் இருக்கலாம்; உடல் வலிக்காகவும் வாங்கிச் சென்றிருக்கலாம். இந்த ஒரு நிகழ்ச்சியையும் படத்தையும் மட்டும் வைத்துக்கொண்டு ஒட்டுமொத்தப் பெண்களையும் எடை போடுவதா? இழிவுபடுத்துவதா? மகளிர் தினம் என்பது எவ்வளவு உயர்வானதென்று உங்களுக்குத் தெரியுமா? உங்கள் பார்வையில் இதுதான் மகளிர் தினமாக இருக்கலாம்; ஆனால் எங்களுக்கு.' என ஆரம்பித்துக் கோபத்தில் பொரிந்து தள்ளிவிட்டார்.

1997ஆம் ஆண்டின் 'தினமணி' தீபாவளி மலரில் காஞ்சி மட சங்கராச்சாரி ஜெயேந்திரர், கைம்பெண்கள் குறித்து, 'ஏதும் விளையாத தரிசு நிலம்' என்று கருத்து வெளியிட்டபோது அதைக் கடுமையாக விமர்சித்து 'தரிசுக் கோட்பாடு' என்னும் தலைப்பிட்டு ஒரு விரிவான, விளக்கமான கட்டுரையை உடனே எழுதி அதை 'தினமணி' பத்திரிகைக்கே அனுப்பினார். அன்றைய நாளிதழில் நடுப்பக்கக் கட்டுரையாகவே அது வெளியானது. இவை எல்லாம் அவரது துணிச்சலுக்கு எடுத்துக்காட்டுகள்.

ஒருமுறை தோழர் பொன்னீலனின் தாயார் அழகிய நாயகி அம்மாள் அவர்கள் சென்னைக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். மிகவும் வயது முதிர்ந்த பெண்மணி. அவர் எழுதிய ஒரே நாவலான 'கவலை' நாவலுக்கு ஒரு விமர்சனக் கூட்டம் புக் பாயிண்ட் (BookPoint) புத்தக விற்பனை நிலையத்தின் கூட்ட அரங்கில் நடைபெற்றது. ராஜம் கிருஷ்ணன் உட்பட மேலும் பலரும் கலந்துகொண்டு பேசினார்கள். அந்நாவலில் ஒரு பெண்ணை அவள் கணவன் திருக்கைவால் சாட்டையைக் கொண்டு அடித்து விளாசுவதாக எழுதப்பட்டிருக்கும்.

அதைக் கொண்டு சுழற்றி அடித்தால் உடல் முழுதும் ரத்த விளாறாகிப் படுகாயமாகிவிடும். அது பற்றிக் குறிப்பிட்டுப் பேசும்போது தன்னையே அடித்தது போல் அவ்வளவு உணர்வு ததும்ப அவர் வீறிட்டுப் பேசியதைக் கண்டு அழகிய நாயகி அம்மாள் எழுந்து வந்து அவரைக் கட்டி அணைத்துக்கொண்டார். பொன்னீலன் அதைப் பார்த்து மிகவும் பூரித்துப் போனார்.

ராஜம் கிருஷ்ணனை 'தாமரை' இதழுக்கு எழுதும்படி தோழர் ப.ஜீவானந்தம் அவருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அதன் பின்னரே ராஜம் கிருஷ்ணன் தாமரைக்குச் சிறுகதைகள் எழுதியுள்ளார். 'இயக்கம் சாராத எழுத்தாளர்களில் ராஜம் கிருஷ்ணன் சமூக உணர்வு அதிகம் உள்ள இலக்கியம் படைப்பவர்' என்று தொமு.சி.ரகுநாதனும் அவர் எழுத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இன்னும் ஹெச்.ஜி.ரசூல், பொன்னீலன், கார்த்திகேசு சிவத்தம்பி, தோத்தாத்ரி, புலவர் ஆ.சிவசுப்பிரமணியன் என இடதுசாரி இலக்கிய கர்த்தாக்கள் பலரும் அவர் எழுத்தைச் சிலாகித்து எழுதியிருக்கிறார்கள்.

தமிழ் இலக்கிய உலகில் எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் பெயர் தவிர்க்க இயலாதது. பெண்ணெழுத்து வகைமையிலும் அவரே முதன்மையானவர். 1940களில் துவங்கி 2010ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ அறுபதாண்டு காலம் தொடர்ச்சியாக எழுத்துப் பணியில் ஈடுபட்டிருந்தவர் ராஜம் கிருஷ்ணன். நாவல், சிறுகதை, ஏராளமான மலையாளச் சிறுகதைகளைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். கட்டுரைகள், குழந்தைகளுக்கான படைப்புகள், வானொலி நாடகங்கள் என எழுத்தின் பல்வேறுபட்ட பரிமாண வகைமையிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டவர் அவர். சாகித்ய அகாதமி விருது உட்பட பல்வேறு விருதுகளையும் பரிசுகளையும் தன் எழுத்தாற்றலுக்காகப் பெற்றவர்.

அவர் உருவாக்கிய படைப்புகள் முற்றிலும் வேறு வகையானவை. சமூக அக்கறையும் சிந்தனையும் பெரும்பான்மையாக அவற்றில் வெளிப்பட்டன. அதேபோல், ஓரிடத்தில் அமர்ந்து கற்பனா ரீதியாக எழுதுவது என்பதில் அவருக்குப் பெரிதாக விருப்பமில்லை. பல்வேறு பகுதிகளுக்கும் நேரடியாகப் பயணித்து, அந்தப் பகுதியிலேயே வாழும் மக்களுடன் தங்கியிருந்து, அவர்களின் அசலான வாழ்க்கையை, அவர்தம் பாடுகளை அறிந்து தகவல்களைத் திரட்டிய பின், அதில் தன் கற்பனையையும் கலந்து அவர் எழுதிய படைப்புகளும் அந்தப் படைப்புகளின் ஊடாகப் பல்வேறுபட்ட பாத்திரங்களை அதிலும் குறிப்பாகக் காத்திரம் மிக்க உழைப்பாளிப் பெண்களை, அசல் போராளிகளை உயிருடன் நம்மிடையே உலவ விட்டவர். அந்தப் பாத்திரங்கள் அனைவரும் வாசகர்களின் மனங்களில் இன்றைக்கும் நிலை பெற்று வாழ்கிறார்கள்.

குழந்தைகளின் உழைப்பு சுரண்டப்படுவது குறித்தும் அவர்களின் அடிப்படை உரிமைகள், நலன்கள், எதிர்காலம் குறித்தும் ராஜம் கிருஷ்ணனின் எழுதுகோல் மகத்தான எழுத்துகளைப் பிரசவித்திருக்கிறது. அவர்கள் பால் கொண்ட மிகுந்த அக்கறையும் அதில் வெளிப்படுகிறது. அவரின் பெரும்பான்மை எழுத்துகளிலும் அனைத்துத் தரப்புப் பெண்களும் 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்பதை நிரூபிப்பது போல் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள்.

அவர் காலத்தில் செயல்பட்டுக்கொண்டிருந்த எழுத்தாளர்களிடமிருந்து தனித்துவமாகச் செயல்படுவதற்கான தனித்தன்மைகள் நிரம்பப் பெற்றவர் அவர். ஆயினும் ஓர் ஆண் படைப்பாளிக்குக் கிடைக்கக்கூடிய எந்த கௌரவமும் அப்போது இவருக்குக் கிடைத்ததாகச் சொல்ல முடியாது. ஒரு பெண் படைப்பாளியாக இருப்பதனால் பல்வேறு போராட்டங்களுக்கும் இடையில்தான் இந்த எழுத்துலகில் அவர் தன்னை நிலை நிறுத்திக்கொள்ள முடிந்தது. ராஜம் கிருஷ்ணன் படைப்புகளைத் தவிர்த்து தமிழ் இலக்கிய வரலாறு எழுதப்படுமானால், அது மிக மோசமான ஒரு வரலாற்றுப் பிழையாகவும் மாறும். தன் படைப்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் மட்டுமல்ல, தரத்தின் அடிப்படையிலும் நமக்கும் இலக்கிய உலகுக்கும் மிக அதிகமாகவே அவர் வாரி வழங்கிச் சென்றிருக்கிறார்.

**தொடர்புக்கு: 9789913810**

# சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த காலக்கெடு

## ஒன்றிய அரசுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதற்கான காலக்கெடுவை ஒன்றிய அரசு அறிவிக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் நீண்டகால கோரிக்கையின் விளைவால்தான் சாதிவாரி கணக்கெடுப்புடன் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

இந்தியாவின் உண்மையான சமூக எதார்த்தங்களைப் பிரதிபலிக்கும் அறிவியல்பூர்வ சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து குரல்கொடுத்து வருகிறது. பீகாரில் பாஜகவின் தாக்குதல்களுக்கு எதிராக சாதிவாரி கணக்கெடுப்பைப் பாதுகாப்பதில் இந்தியக் கம்யூனிஸ்ட் முக்கியப் பங்காற்றியுள்ளது, தெலங்கானாவிலும் இதேபோன்ற முயற்சிகளுக்கு வலுவான ஆதரவை வழங்கியுள்ளது.

தேசத்தின்மிகமுக்கியப்பிரச்சனையான சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதற்காக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மக்களைத் திரட்டி தீவிரமாகப் போராடியும் பொதுக்கருத்தை உருவாக்கவும் முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளது.

அதேநேரத்தில், 2021 ஆம் ஆண்டு எடுக்கவேண்டிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படாமல், தொடர்ந்து தாமதமாவதற்கு தமது ஆழ்ந்த கவலைகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது. நான்கு ஆண்டு கடந்த பிறகும் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்துவதற்கான காலக்கெடு தீர்மானிக்கப்படவில்லை. இதனால் காலம் கடந்த புள்ளிவிவரங்களைக் கொண்டு அரசின் கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டு வருகிறது.

எனவே, சாதிவாரி கணக்கெடுப்புடன் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்துவதற்கான அட்டவணையை ஒன்றிய அரசு உடனடியாக, உறுதியாக வெளியிட வேண்டும். ஏற்கனவே இட ஒதுக்கீட்டில் உள்ள 50 விழுக்காடு உச்சவரம்பை நீக்க வேண்டும் என்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது. மேலும், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதன் மூலம் சமூகநீதியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல முடியும் என்றும் கருதுகிறது.

# என்.எஸ்.பிரதாப் சந்திரன் எழுதிய த.வெள்ளையன் நூல் வெளியீட்டு விழா



தாம்பரம் அடுத்த படப்பையில் நடைபெற்ற தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையின் 42 வது மாநில மாநாட்டில், என்.எஸ்.பிரதாப்சந்திரன் எழுதிய சுதேசி நாயகன், வணிகப்போராளி த.வெள்ளையன் எனும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் மெஸ்மார்க் காந்தன் வெள்ளையன் முன்னிலையில், மாநிலத் தலைவர் எஸ்.சௌந்தரராஜன் வெளியிட, மதிமுக பொதுச்செயலாளர் வைகோ எம்பி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பி.சண்முகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் ந.பெரியசாமி எக்ஸ் எம்எல்ஏ, வணிகர் சங்கத்தின் அகில இந்திய தலைவர் மிஸ்ரா, தமிழக வாழ்வுரிமை கட்சியின் மாநிலத் தலைவர் வேல்முருகன் எம்எல்ஏ, மே 17 இயக்கத் தலைவர் திருமுருகன் காந்தி, மதிமுக துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்யா, சங்கத்தின் திருவள்ளூர் மாவட்ட தலைவர் மணலி டி.எ.சண்முகம், மாவட்டச் செயல் செயலாளர் வி.எஸ். லிங்கம் உள்ளிட்டோர் பெற்றுக்கொண்டனர்.

# கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.4500 வழங்க தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

2025–26 ஆம் ஆண்டில் தமிழகத்தில் கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4500 வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.குணசேகரன் முன் எம்எல்ஏ, பொதுச்செயலாளர் பி.எஸ். மாசிலாமணி ஆகியோர் கூட்டாக விடுத்த அறிக்கை வருமாறு :

ஒன்றிய அரசின் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு கூடி, வரும் 2025–26 ஆம் ஆண்டுப் பருவத்திற்காகக் கரும்புடன் ஒன்றுக்கு ரூபாய் ரூ.3550 என்று அறிவித்துள்ளது. 10.5 சதம் சர்க்கரை பிழி திறன் உள்ள கரும்புக்கு மட்டுமே இந்த விலை கிடைக்கும். சர்க்கரை பிழி திறன் 9.5 சதம் மற்றும் அதற்குக் கீழானால் உயர்த்தப்பட்ட இவ்விலை கிடைக்காது. தமிழகத்தில் விளையும் கரும்புகளுக்கு டன் ஒன்றுக்கு 3290 ரூபாய் மட்டுமே கிடைக்கும். உயர்த்தப்பட்ட விலையில் ரூபாய் 210 தமிழக விவசாயிகளுக்குக் கிடைக்காது. தமிழகத்தில் விளையும் கரும்புகளில் 9.5 சதம் சர்க்கரை சத்து அதற்குக் குறைவான அளவிலேயே உள்ளது. ஆகவே ஒன்றிய அரசு அறிவிக்கும் விலை உயர்வு தமிழகக் கரும்பு விவசாயிகளுக்குப் பயனில்லை.

சாகுபடி செலவு சுமார் 8 சதம் உயர்ந்துள்ள நிலையில், 4.41 சதம்தான் கொள்முதல் விலையை ஒன்றிய அரசு உயர்த்தியிருக்கிறது.

தமிழகத்தில் நெல் சாகுபடிக்கு அடுத்த படியாக கரும்பு சாகுபடிதான் இருந்து வந்தது. இது தற்பொழுது படிப்படியாகக் குறைந்து வருகிறது. கரும்பு ஆலைகளின் விவசாயிகளுக்கு எதிரான நடவடிக்கைகளாலும், அரசுகளின்



ஆதரவின்மையாலும் இதன் சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது. இவற்றைக் கணக்கில் கொண்டு, கரும்பு சாகுபடியைப் பாதுகாக்கும் நோக்கில், விலை உயர்வை முறையாக விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும்.

தமிழ்நாடு அரசின் கரும்பு விலை உயர்விற்கான தேர்தல் காலவாக்குறுதியை நடைமுறைப்படுத்தாதது சரியல்ல, ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடக்கும் கருத்துக் கேட்டுக் கூட்டத்தில் இதை வலியுறுத்தி வருகிறோம். இந்நிலையில், ஒன்றிய அரசு கரும்பு விவசாயிகள் உற்பத்தி செய்யும் 9.5 சதம் கரும்புகளுக்கும் இந்த விலை உயர்வு வழங்கிடும் நிலையில் இதில் தளர்வை அறிவித்து நடைமுறைப்படுத்திடவும், தமிழகக் கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 4500 விலையாகக் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

அதுவரை தமிழக முதல்வர் இடைநிகழ் செலவுடன், ஊக்கத்தொகை எனும் நிலையில் டன் ஒன்றுக்கு ரூபாய் 4500 கிடைக்க வழி செய்திட வேண்டும் எனத் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம் என்று தங்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.

# மரபணு மாற்றப்பட்ட நெல் விதை அறிமுகம்

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டனம்

ஒன்றிய அரசின் வேளாண் துறை அமைச்சர் மரபணு மாற்றப்பட்ட நெல் விதை அறிமுகம் செய்ததற்கு, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.குணசேகரன் முன் எம்.எல்.ஏ, பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

டெல்லியில் ஒன்றிய அரசின் வேளாண் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான், மரபணு மாற்றப்பட்ட இரண்டு நெல் விதைகளைப் புதிதாக அறிமுகம் செய்துள்ளார். இவ்விதைகள் பருவநிலை மாற்றத்திலும் தாக்குப்பிடிப்பதுடன், 30 சதம் கூடுதலாக விளைச்சல் கிடைக்கும். தண்ணீர்ப் பற்றாக்குறையைத் தாக்குப் பிடிக்கும் எனப் பெருமையுடன் இதை அறிமுகம் செய்துள்ளார்.

பருத்தி, கத்திரி, தக்காளி, மிளகாய் ஆகிய செடிப் பயிர்களில்தான் மரபணு மாற்று விதைகளை, வேளாண் பல்கலைக்கழகங்களின் ஆதரவுடன் தனியார் நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. இதை அறிமுக நிலையிலேயே தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் உள்ளிட்ட பல சங்கங்கள் எதிர்த்து வரும் நிலையில், இது உச்சநீதிமன்றத்தில் வழக்கிலும் உள்ளது. இந்தியாவில் மரபணு மாற்று விதைகளை ஆய்வு செய்வதற்குரிய ஆய்வுக்கூடங்களே இல்லை என ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஜெனட்டிக் இன்ஜினியரிங் அத்தாரிட்டி கவுன்சில் கூறியுள்ளது. வேளாண் உற்பத்தி இரு மடங்கு உயர வேண்டும் எனப் புகுத்தப்பட்ட பசுமைப் புரட்சியால் நஞ்சான விதைகளும், அதீத இரசாயன உரங்களும், பூச்சி மருந்துகளும், நோய் மருந்துகளும் இந்தியச் சுற்றுச்சூழலைக் கேடாக்கி, உண்ணும் உணவில் நஞ்சு உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மரபணு மாற்றப்பட்ட கடுகு விதையைக் கூட எதிர்த்துப் போராட்டம் நடந்து வரும் நிலையில், லாவகமாக மரபணு திருத்தப்பட்டது என ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

பாசனக் கட்டமைப்புகளை மேம்படுத்தி, விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றினாலே வேளாண்மை உற்பத்தி மேலும் ஒரு மடங்கு பெருக்கலாம். எனவே ஒன்றிய அரசு மரபணு மாற்று ஆய்வு மற்றும் விதைகளைத் தடுத்து நிறுத்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம். இல்லையேல் இவ்விதைகளை எதிர்த்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தொடர்ந்து போராடும் என்று தங்களது அறிக்கையில் கூறியுள்ளனர்.

# ஆசிரியர் எம்.சுந்தரமூர்த்தி மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

ஆசிரியர் எம்.சுந்தரமூர்த்தி மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முத்த உறுப்பினரும், பட்டதாரி ஆசிரியருமான எம்.சுந்தரமூர்த்தி (70), 30.04.2025 அன்று தஞ்சாவூரில் காலமானார் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம். ஆசிரியர் எம்.சுந்தரமூர்த்தி கும்பகோணம் அருகில் உள்ள அண்ணலக்கராகரம் ஊரைச் சேர்ந்தவர், இவர் பட்டப்படிப்பு முடித்து, ஆசிரியர் பணிநியமனம் பெற்றதன் காரணமாக தஞ்சாவூரில் குடியேறியவர். ஆசிரியர் இயக்கங்களிலும், பொமக்கள் நலன் சார்ந்த மக்கள் இயக்கங்களிலும் தீவிரமாகப் பங்கேற்றவர்.

இவரது வாழ்விணையர் மதுர நிர்மலா ஆசிரியர் பணியில் இரண்டு நாட்களுக்கு முன்பு தான் பணி ஓய்வு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியர் எம்.சுந்தரமூர்த்தி மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# சோழிங்கநல்லூர் ஜி.கண்ணதாசன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சோழிங்கநல்லூர் தொகுதிச் செயலாளர் ஜி.கண்ணதாசன் மறைவுக்கு, கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.



கட்சியின் சோழிங்கநல்லூர் தொகுதிச் செயலாளர் ஜி.கண்ணதாசன் (57) 03.05.2025 அன்று அதிகாலை நடந்த சாலை விபத்தில் காலமானார் என்ற துயரச் செய்தியை ஆழ்ந்த வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தென் சென்னை மாவட்டக் குழு உறுப்பினர் ஜி.கண்ணதாசன், சோழிங்கநல்லூர் தொகுதிச் செயலாளர் பொறுப்புகளில் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வந்தார். பள்ளிக்கரணை துரைப்பாக்கம் உள் சுற்றுச் சாலையில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தார் என்பது மிகுந்த வேதனையளிக்கிறது.

காலமான ஜி.கண்ணதாசன் அகால மறைவுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் கூறி, ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது என்று மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### தலைவர்கள் நேரில் அஞ்சலி

ஜி.கண்ணதாசன் உடலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஆர்.முத்தரசன், மாநிலக் குழு உறுப்பினர் எஸ்.ஏழுமலை, மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா உள்ளிட்ட மாவட்ட முன்னணித் தோழர்கள் நேரில் அஞ்சலி செலுத்தினர். சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ் அஞ்சலி செலுத்தியதுடன் பத்தாயிரம் நிதியும் வழங்கினார்.

## ஆதி திராவிட மற்றும் பழங்குடியினரின் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் விரிவாக்கம்

# சொத்து வரையறைக்குள் அறிவுசார் சொத்தும் சேர்ப்பு

**ஆதி திராவிட மற்றும் பழங்குடியினரின் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் விரிவாக்கத்தில் சொத்து வரையறைக்குள் அறிவுசார் சொத்தும் சேர்க்கப்பட்டுள்ளது.**




ஒரு தம்பதியினரின் விடா முயற்சியால் ஆறு வருட கால போராட்டத்திற்கு பின் நீதித்துறையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் அறிவுசார் சொத்து சேதப்படுத்துதல் பற்றிய வரையறை விரிவாக்கம் பெற்றுள்ளது. அவர்கள் ஜவர்கலால் நேரு பல்கலைக்கழகத்தில் படித்தவர்கள்.

இப் பல்கலைக்கழகம் பாடக் கல்விக்கு அப்பாற்பட்டு சிந்தனைத் திறன் மேம்பாடு, ஆக்கபூர்வமான வெளிப்பாடான விவாதங்கள் நிறைந்த பல்கலைக்கழக வளாகச் சூழலும் ஒருங்கே பெற்றதால் மாணவர்களின் ஆளுமைகளை வளர்த்தெடுப்பதிலும் சிந்தனைத் திறன் மேம்படுத்துதலிலும் பெரும் பங்கு ஆற்றுகிறது.

இப்பல்கலைக்கழகம் தனிச்சிறப்பு வாய்ந்தது ஏனென்றால் இங்கு கருத்துப் பரிமாற்றம் ஆரோக்கியமான விவாதங்கள் பிரச்சனைகள் பேசப்படுகின்றன. அன்றாட கல்வி மேம்பாட்டுடன் ஆளுமைகளை வளர்த்தெடுப்பதில் பெரும்பங்காற்றுகிறது.

இங்கு பயில வரும் மாணவ மாணவியர்கள் இனம் மதம் வேறுபாடு இல்லாமல் அப்பாற்பட்டு அனைத்துச் சமூகப் பொருளாதார அடுக்குகளைச் சார்ந்தவர்கள். ஆகையால்தான் ஒன்றிய அரசு இப்பல்கலைக்கழகத்தின் மேல் தனிப் பார்வையுடன் கூடிய தாக்குதல் நடத்துகிறது ஆயினும் எழுச்சிமிக்க அறிவு கூர்மையுடன் மாணாக்கர்கள் உருவாக்கப்படுகிறார்கள்.

போராட்டக் குணம் உடைய இந்தத் தம்பதியர்கள் ஆராய்ச்சியாளர்கள். ஆறு வருட கால சட்டப் போராட்டத்தைக் கையில் எடுத்து நீதித்துறையை சட்ட விரிவாக்கத்திற்கு உடன்பட வைத்தார்கள். அதன் அடிப்படையில் அறிவு சார் சொத்தை திருடுதல், அழித்தல் போன்ற குற்றங்களைச் சட்ட வரையறைக்குள் உட்படுத்தினார்கள்.

அவர்களாகவே எந்த ஒரு சட்ட வல்லுனர்களின் உதவி இன்றி உயர் நீதி மன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தில் போராடினார்கள்.

தம்பதியர் சிப்ரா உ.கே.சிவசங்கர் தாஸ் ஆராய்ச்சி படிப்பை முடித்து விட்டார்கள். மேலும் தொடர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். 2014 ல் நாடாளுமன்ற சட்டமன்ற தேர்தலுக்குப்பிறகு நாக்பூரில் சமுதாய அரசியல் விழிப்புணர்வு இயக்கத்தை இளைய தலைமுறை இடையே கொண்டு சென்றார்கள்.

மேலும் மறு சீரமைப்பு மற்றும் வளமான முன்னேற்றம் என்ற தன்னார்வ நிறுவனத்தின் இயக்குனர்களாக செயல்பட்டு வருகிறார்கள். அதற்காக நாக்பூர் லட்சுமி நகரில் அடுக்குமாடி வாடகை குடியிருப்பில் வசித்து வந்தார்கள், சுற்றிலும் ஆதிக்க சாதியினர். குடியிருப்பு சொந்தக்காரர் மற்றும் அண்டை வீட்டார்கள் இவர்களின் செயல்பாடுகளை கவனித்து வந்தார்கள். ஜனவரி 30 – 2016 ஆம் ஆண்டு கல்வி வளாக நிகழ்வுக்குப் பிறகு இவர்களின் ஈடுபாட்டை அதிக கவனம் செலுத்த ஆரம்பித்தார்கள். வீட்டையும் காலி செய்ய கேட்டுக் கொண்டார்கள்.

அன்று ஒரு நாள் இவர்கள் தலைநகர் புதுடெல்லி சென்றிருக்கும் வேளையில் 8 செப்டம்பர் 2018 அன்று நாக்பூரில் இவர்கள் வீடு சூறையாடப்பட்டது. காவலர்கள் உதவியுடன் தாழ்ப்பாள் உடைக்கப்பட்டது. டெல்லியிலிருந்து நாக்பூர் திரும்பி வந்து பார்த்த பொழுது வீட்டுக் கதவுகள் உடைக்கப்பட்டு இருந்தன. மடிக்கணினி பென்டிரைவ் ஹார்ட் டிஸ்க் ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட நோட்டுகள் கல்வி சான்றிதழ்கள் 500 க்கும் மேற்பட்ட பேட்டிகள், ஆராய்ச்சி நூல்கள், குறிப்புகள், ஆவணங்கள் திருடப்பட்டிருந்தன. பெரும்பாலானவை மடிக்கணினிகளிலிருந்து அழிக்கப்பட்டு இருந்தன. அவர்கள் நிறுவனம் சார்ந்த செயல்பாட்டு ஆவணங்கள் அனைத்தும் நீக்கப்பட்டு இருந்தன

அனைத்து ஆவணங்களும் சூறையாடப் பட்டதை அறிந்த அவர்கள் வெகுண்டு எழுந்தார்கள். 9 செப்டம்பர் 2018 அன்று பஜாஜ் நகர் காவல் நிலையத்திற்கு 8 மாத கைக்குழந்தையுடன் புகார் மனு அளிக்கச் சென்றார்கள். அங்கும் ஏமாற்றமே.

ஒரு நாள் பொழுதும் தங்க வேண்டிய நிர்ப்பந்தம். ஆதிதிராவிட சாதி சான்றிதழ் சமர்ப்பித்த பின்னரே புகார் மனு பெறப்பட்டது.

இது ஒரு வகையான சாதிய வன் கொடுமை. இவர்கள் உயர் சாதியினரால் தாக்கப்படவில்லை. எந்த ஒரு வெளி காயங்களோ சாதிய துன்புறுத்தலோ இல்லை. அவர்கள் வீட்டில் உள்ள மற்ற பொருள்கள் ஸ்கூட்டர் மோட்டார் சைக்கிள் வாகனங்கள் நகைகள் பணம் திருடப்படவில்லை, அவர்களிடம் விளைநிலங்களில் பயிர்கள் அழிக்கப்படவில்லை, மாறாக அவர்களுடைய அறிவு சார்ந்த சொத்து ஆவணங்கள் அனைத்தும் திருடப்பட்டிருந்தன. இதுவும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்பு சட்டத்திற்குள் வரையறுக்கப்பட வேண்டியது.

நிவாரணம் அளிக்க வேண்டியது அந்த மாநிலத்தின் பொறுப்பு. அறிவுசார் சொத்து சேதம் அடைந்ததற்காகவும் முழுவதும் அழிக்கப்பட்டு இருந்ததற்காகவும். ஆட்சியரிடம் நிவாரணத் தொகை வேண்டி முறையிடப்பட்டது.

ஆனால் ஆட்சியர் நிவாரணம் வழங்க மறுத்துவிட்டார். மேலும் காவலாளிகள் மீது எந்தவித விசாரணை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை .

கடைசியாக சிப்ரா சிவசங்கரதாஸ் இருவரும் 2021ல் நாக்பூர் பெஞ்ச் பாம்பே உயர்நீதிமன்றத்தில் முறையிட்டார்கள். இரண்டு முக்கிய விவாதங்கள் முன்வைக்கப்பட்டன.

1. பிரிவு 15ன் கீழ் வன்கொடுமை தடுப்பு சட்டம் Act 1989, இந்த வகையான இழப்புகளுக்கு நிதி நிவாரணம் கொடுக்கப்பட வேண்டுமா /இல்லையா.

2. அறிவுசார் சொத்து இழப்பு என்பது சொத்து இழப்புக்குள் வரையறுக்கப்படுமா/இல்லையா

இவர்கள் வாதம் என்னவென்றால் அறிவுசார் சொத்தாக கணக்கிடப்படும் எலக்ட்ரானிக் உபகரணங்கள், ஆய்வு சம்பந்தப்பட்ட ஆவணங்கள், பேப்பர்கள், சான்றிதழ்கள் போன்றவை சேதமடையும்/அழிக்கப்படும் நிலையில் சொத்து இழப்பு property வரையறைக்குள் உட்படுத்துதல்

மகாராஷ்டிரா அரசின்படி சொத்து என்பது வீடு மற்றும் அசையும் /அசையா பொருள்களின் உள்ளடக்கம். அறிவுசார் சொத்துகள் அதனுள் வரையறுக்கப்பட வில்லை. அறிவு சார் சொத்து என்று கணக்கிடப்படும் எலக்ட்ரானிக் சாதனங்கள் பதிவு ஏற்றப்பட்ட ஆவணங்கள் போன்றவை நேரடி பார்வைக்குப் புலப்படாத நிலையில் அறிவு சார் சொத்து அழிப்பு / சேதம் என்பது மறுபரிசீலனைக்கு/ மறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் அடுத்தவர்களின் ஆவணங்கள் அழிக்கப்பட்ட நிலையில் பொருள் சேத நிவாரணமாக கணக்கிடப்பட்டு, அதற்கு நிதி நிவாரணமே வழங்கப்பட வேண்டும். மறு ஆய்வுக்காக உச்சநீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யப்பட்டது நீதிபதி பி.வி.நாகரத்தினம் நீதிபதி சதீஸ் ஷர்மா ஆகியோர் மாநில அரசின் தீர்ப்பு ஏற்புடையதல்ல என்று 24 ஜனவரி 2025 தீர்ப்பளித்தார்கள்.

சிப்ரா சிவசங்கரதாஸ் இருவரும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை Act 1989 விடாமுயற்சியாக நிவாரண வழங்கப்படல் பற்றிய சட்ட போராட்டத்தில் தங்களை முனைப்போடு ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

அறிவு சார் சொத்து இழப்பு என்பது சொத்து இழப்பின் அடிப்படையின் கீழ் வரையறைக்கு உட்படுத்த வேண்டும் மற்றும் அதற்கான நிதி நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

நாக்பூர் ஆட்சியர் அறிவு சார் சொத்து இழப்புக்கான நிதி நிவாரணம் வழங்க முன்வரவில்லை. உச்சநீதிமன்றம் இழப்பின் நிவாரணத் தொகையைக் கணக்கிடுமாறு ஆட்சியருக்கு ஆணையிட்டது. இழப்பு பல கோடியாகக் கணக்கிடப்பட்டது.

அவர்களின் ஆறு வருட கால சட்டப் போராட்டம் பாராட்டப்பட வேண்டியது.

ஏனென்றால் போராட்டத்தின் விளைவு சொத்து சார்ந்த வன்கொடுமை தடுப்புச் சட்டம் விரிவாக்கம் மறு வரையறை அடைந்துள்ளது. சொத்து அடிப்படையின் கீழ் அறிவுசார் சொத்தும் உள்ளடக்கம் பெற்றுள்ளது. மேலும் எந்தவித அநீதியையும் பொறுத்துக் கொள்ளாத சமுதாயத்தை உருவாக்கியதில் அவர்களின் பங்களிப்பு மகத்தானது.

## தமிழ்நாடு டி.பி.சி தொழிலாளர் சங்கத்தை ஏஐடியூசியுடன் இணைக்க மாநிலப் பொதுக் குழு ஒப்புதல்




தமிழ்நாடு டி.பி.சி தொழிலாளர் சங்கத்தின் மாநிலப் பொதுக் குழுக் கூட்டம் மற்றும் கருத்தரங்கம் 27.04.2025 அன்று ஈரோடு மாவட்டம், காளிங்கராயன்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகில் சங்க மாவட்டத் தலைவர் ஆர்.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில் ஏஐடியூசியின் அகில இந்தியத் துணைத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி கருத்தரங்கைத் துவக்கிவைத்துச் சிறப்புரையாற்றினார்.

சங்கத்தின் தலைவர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத், ஏஐடியூசி மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி கருத்துரை வழங்கினர். ஏஐடியூசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி, மாவட்ட துணைச் செயலாளர் கே.சக்திவேல், உள்ளாட்சித் துறை சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ஆர்.மணியன், கட்சியின் பவானி நகரச் செயலாளர் வழக்கறிஞர் பாலமுருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழ்நாடு டி.பி.சி தொழிலாளர் சங்க நிர்வாகிகள் ஏ.சதீஷ், க.பூமிநாதன், சுதா, எம்.செந்தில்குமார், கருப்பையா, க.முனியப்பன், மாசிலாமணி, கதிர்வேல், விஸ்வநாதன் மஞ்சுளா உள்ளிட்டோர் உரையாற்றினர். இதில் 600 க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். சங்கத்தை ஏஐடியூசியுடன் இணைப்பது எனவும் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

இதில் கௌரவத் தலைவராக டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, தலைவராக டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத், துணைத் தலைவர்களாக விழுப்புரம் ஆர்.குணசேகர், நாமக்கல் சுதா, செங்கல்பட்டு கோகுல், தர்மபுரி சின்னமணி, சேலம் ரமேஷ், பொதுச்செயலாளராக கடலூர் ஏ.சதீஷ், துணைப் பொதுச் செயலாளராக ஈரோடு ஆர்.மகாலிங்கம், செயலாளர்களாக விழுப்புரம் பி.செந்தில்குமார், தர்மபுரி பிரபாகரன், கிருஷ்ணகிரி ஆறுமுகம், கள்ளக்குறிச்சி முனுசாமி, பெரம்பலூர் சேகர், பொருளாளராக கடலூர் க.பூமிநாதன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

2017 ஆண்டு அரசாணைப்படி அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படி வழங்க வேண்டும். ஊதியத்துடன் கூடிய வார விடுமுறை, பணிப் பாதுகாப்பு, பணி நிரந்தரம், ஊதிய உயர்வு, ஆண்டு முழுவதும் வேலை, தினக் கூலி முறைக்கு மாற்றாக மாத ஊதியம் வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சேலம் திருமண விழாவில் கட்சியின் மாநில மாநாட்டு நிதி வழங்கப்பட்டது



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசாய் நகர், மறைந்த மூத்த தோழர் ஜெகநாதன் அவர்களின் புதல்வர் ஆல்வின், கனிமொழி திருமண நிகழ்வில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது மாநில மாநாட்டு நிதி ரூபாய் 5000 வழங்கினர். அஜய்கோஷ் அவர்களின் குடும்ப நிதி 1000 வழங்கினர். கட்சியின் மாவட்டச் செயலாளர் ஏ.மோகன், மாணவர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் பா.தினேஷ், மேட்டூர் மேச்சேரி இடைகமிட்டிச் செயலாளர் கே.வி.ராஜேந்திரன் மற்றும் அஜாய்கோஷ் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

## ஏஐடியூசி ஆட்டோ சங்கப் புதிய கிளை துவக்கம்



செங்கல்பட்டு மாவட்டம் ஈசிஆர் சாலை, எம்ஜிஎம் அருகில், ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கம் புதிய கிளை அமைப்புக் கூட்டம் டில்லிபாபு தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் க.ஜெகதீசன் அமைப்பு நிலை சம்பந்தமாக விளக்கவுரை ஆற்றினார். கட்சியின் திருப்போரூர் தொகுதி பொருளாளர் ஒய்.ஹாருன்பாஷா வாழ்த்துரை வழங்கினார்.

இதில் தலைவராக டில்லிபாபு, செயலாளராக சுல்தான், பொருளாளராக கவியரசு, துணைத் தலைவராக கணேசன், துணைச் செயலாளராக பாகர்சேட் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். நிறைவாகச் செயலாளர் சுல்தான் நன்றி கூறினார்.

## அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் 66வது அமைப்பு தினம்



**மணிகண்டம் ஒன்றியம்:** அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மணிகண்டம் ஒன்றியக் குழு சார்பில் 66வது அமைப்பு தின நிகழ்ச்சி ஒன்றியச் செயலாளர் ஏ.இன்னசென்ட் விமலா மேரி தலைமையில், சோமரசம்பேட்டை அலுவலகத்தில் நடைபெற்றது. முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் எம்.ஆர்.முருகன் இளைஞர் மன்ற கொடியினை ஏற்றிச் சிறப்புரையாற்றினார்.

இதில் இளைஞர் மன்ற ஒன்றியப் பொருளாளர் எஸ்.பாலாஜி, ஒன்றியத் துணைத் தலைவர் கோபாலகிருஷ்ணன், ஒன்றியக் குழு உறுப்பினர் கோவிந்தராஜ், மாதர் சங்க ஒன்றியப் பொருளாளர் எம்.ரஜியாபேகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செங்கல்பட்டு:** செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் தொகுதி



பஞ்சந்திருத்தியில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் 66வது அமைப்பு தினம் மாவட்ட தலைவர் மோ.வெங்கடேசன் தலைமையில், மாவீரன் பகத்சிங் திருவுரு சிலைக்கு தேசியக் குழு உறுப்பினர் மு.பார்த்திபன் மாலை அணிவித்து 2025ம் ஆண்டு உறுப்பினர் அட்டை வழங்கினார். இதில் வான்மதி, சௌந்தர்யா, இராமு, சின்னராசு, பச்சையப்பன் உள்ளிட்டோர் பங்கற்றனர்.

## கட்சி ஒன்றிய, கிளை மாநாடுகள்




**சின்னமனூர் ஒன்றிய மாநாடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சின்னமனூர் ஒன்றிய 7வது மாநாடு வே.ஜீவபாரதி, மா.பூங்கொடி ஆகியோர் தலைமையில், பி.எஸ்.குருசாமி கொடியேற்றினார். ம.விக்னேஷ்வரன் அஞ்சலித் தீர்மானம் முன்மொழிந்தார். மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.இரவி துவக்க உரையாற்றினார். ஒன்றியச் செயலாளர் இரா.கதிரப்பன் வேலையறிக்கை சமர்ப்பித்தார். மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் இரா.தமிழ்பெருமாள், எம்.வி.கல்யாணசுந்தரம் மற்றும் மாவட்டக் குழு உறுப்பினர் செ.ஆனந்த் ஆகியோர் மாநாட்டை வழிநடத்தினார்கள்.

இதில் ஒன்றியச் செயலாளராக வே.ஜெய்ஹிந்த, ஒன்றியத் துணைச் செயலாளர்களாக ஏ.முருகன், ஆர்.ஆனந்த் ஒன்றியப் பொருளாளராக மா.பூங்கொடி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சின்னமனூர் பகுதியில் இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஏற்படுத்திட வேண்டும்.

சின்னமனூர் ஒன்றியத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**ஞாயிறு கிளை:** திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் ஒன்றியம், ஞாயிறு கிளை மாநாடு எஸ்.உதயன் தலைமையில், மாநாட்டுக் கொடியை ஒன்றியப் பொருளாளர் கே.குமரேசன் ஏற்றினார். மூத்த தோழர் கே.போஸ் தொடங்கி வைத்தார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் என்.எஸ்.பிரதாபசந்திரன், பி.வி.செந்தில், மாவட்டக் குழு உறுப்பினர் ஜி.பாலன், ஏஐஎஸ்எப் மாவட்ட துணைத் தலைவர் பிரியதர்ஷினி ஆகியோர் வாழ்த்திப் பேசினர். இதில் கிளைச் செயலாளராக எஸ்.பி.சுரேஷ், துணைச் செயலாளராக எம்.சபாபதி மோகன், பொருளாளராக என்.தேவா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**சிவந்தி ஆதித்தன் நகர் கிளை:** சோழவரம் ஒன்றியம் சிவந்தி ஆதித்தன் நகர் கிளை மாநாடு கே.குமரேசன் தலைமையில், மூத்த தோழர் கே.போஸ் கொடியேற்றி வாழ்த்துரை வழங்கினார். இதில் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் என்.எஸ்.பிரதாப் சந்திரன் மற்றும் வி.பிரபாகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதில் கிளைச் செயலாளராக கே.தினேஷ், துணைச் செயலாளராக எம்.ஆகாஷ், பொருளாளராக மோகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**பத்தமடை கிளை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பத்தமடைக் கிளையில் 25வது மாநாடு ஏ.எஸ். ஹமீது தலைமையில், ஏ.ராமகிருஷ்ணன் கொடியேற்றினார். மாவட்டக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் ஆர்.ரெங்கன் சிறப்புரை ஆற்றினார். இதில் செயலாளராக என்.பி.சேக், துணைச் செயலாளராக க.பஸ்கரன், பொருளாளராக ஏ.எஸ்.ஹமீது, மாவட்டக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் ஆர்.ரெங்கன் சிறப்புரை ஆற்றினார்.

**வெங்கிட்டாபுரம் கிளை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோவை மேற்கு வெங்கிட்டாபுரம் கிளை மாநாடு, பூபேஷ் குப்தா நினைவுப் படிப்பகத்தில் கே.புருசோத்தமன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டப் பொருளாளர் சி.தங்கவேல் கொடி ஏற்றினார். அ.அசரப் அலி அஞ்சலித் தீர்மானத்தை வாசித்தார். கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் மௌ.குணசேகர் அரசியல் விளக்க உரையாற்றினார். கிளைச் செயலாளராக ஜெ.பத்மநாபன், துணைச் செயலாளர்களாக பி.கந்தசாமி, அ.மோகன் பொருளாளராக வே.நாகமாணிக்கம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**குருவிகுளம்:** தென்காசி மாவட்டம் குருவிகுளத்தில் கட்சியின் 3வது கிளை மாநாடு நடைபெற்றது. செயலாளராக அந்தோணிராஜ் துணைச் செயலாளர்களாக எஸ்.கணேசன், எல்.கிருஷ்ணசாமி, பொருளாளராக முருகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## மது விற்பனைக்குத் துணைபோகும் காவல் சார்பு ஆய்வாளர்

### நடவடிக்கை எடுக்கக் கோரி தெருமுனைக் கூட்டம்



மகாவீரர் ஜெயந்தி நாளில் ராஜாதானி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில், மதுவிற்க அனுமதித்த காவல் சார்பு ஆய்வாளர் முகமது யாஹியா மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, கட்சியின் ஆண்டிபட்டி ஒன்றியக் குழு சார்பில், தெருமுனை விளக்கக் கூட்டம் ஒன்றியச் செயலாளர் பா.பிச்சைமணி தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட துணைச் செயலாளர் வே.பரமேஸ்வரன், நகரச் செயலாளர் க.முனீஸ்வரன், ஒன்றிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.பெருசு ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக ஏஐஓஎஃப் மாநிலத் தலைவர் இரா.தமிழ்பெருமாள் முடித்து வைத்துப் பேசினார்.

## சிறுபான்மை மக்கள் வாழ்வுரிமை இயக்கத்தின் வடசென்னை மாவட்டப் பேரவை




சிறுபான்மை மக்கள் வாழ்வுரிமை இயக்கத்தின் வடசென்னை மாவட்ட பேரவைக் கூட்டம் 28.04.2025 அன்று யு.ஜீலானி தலைமையில் நடைபெற்றது. ஜி.இராஜசேகர் வரவேற்புரை ஆற்றினார். ஜெ.ஆசிப் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் வகிதா நிஜாம் துவக்கவுரை ஆற்றினார்.

முன்னாள் மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, வண்ணாரப்பேட்டை அனைத்து ஜமாத் கூட்டமைப்பு தலைவர் ஒய்.முஹம்மது லத்தீப், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஜீ.சுப்ரமணி, எம்.ஜெய்சங்கர், 42வது வார்டு மாமன்ற உறுப்பினர் மோ.ரேணுகா ஆகியோர் வாழ்த்துரை ஆற்றினர்.

மாவட்ட அமைப்பாளராக யு.ஜீலானி தேர்வு செய்யப்பட்டார். கட்சியின் மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி வாழ்த்திப் பேசினார். மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் நிறைவுரையாற்றினார்.

### விசைத்தறித் தொழிலாளர்கள் கூலி உயர்வு ஒப்பந்தம்

## அனைத்துத் தொழிற்சங்கப் பேச்சுவார்த்தையில் உடன்பாடு

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம், சத்திரப்பட்டியைச் சுற்றி விசைத்தறித் தொழிற்சாலைகள் ஏராளமாக உள்ளன. இவைகளில் ஏராளமான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றார்கள். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்ட ஒப்பந்தம் முடிவுக்கு வந்தது. புதிய ஒப்பந்தம் போடுவது தாமதமாகி வந்தது. தொழிற்சங்கங்கள் போராட்டத்திற்கு ஆயத்தமாக மகாசபைக் கூட்டங்களை நடத்தின. இந்நிலையில் உற்பத்தியாளர்கள் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்தனர். கூட்டத்திற்கு ஆறுமுகா குரூப்ஸ் சேர்மன் ஆறுமுகம் தலைமை வகித்தார். ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் முத்துமாரி, ஒன்றியச் செயலாளர் இராமச்சந்திரன், கலுசுபோதி, சிஐடியு சோமசுந்தரம், திமுக ஆசைத்தம்பி, அதிமுக பழனிவேல், தேமுதிக பொன்னுச்சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பேச்சுவார்த்தையில் முதலாமாண்டு ஆறு பைசா உயர்த்துவது, இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு நான்கு பைசா உயர்த்துவது என்று ஒப்பந்தம் போடப்பட்டது.

## அதுல்குமார் அஞ்சான் முதலாமாண்டு நினைவஞ்சலி

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் முன்னாள் பொதுச்செயலாளர், எம்.எஸ்.சாமிநாதன் தலைமையிலான வேளாண் ஆணையத்தின் செயல்பாட்டுக் குழு உறுப்பினர் அதுல்குமார் அஞ்சான் முதலாமாண்டு நினைவு தினம் நிகழ்ச்சி 3.5.2025 அன்று திருவாரூர் ம.சிங்காரவேலர் நினைவகத்தில் நடைபெற்றது.

சங்க மாநிலப் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி மாலை அணிவித்துப் புகழுரை ஆற்றினார். இதில் கட்சியில் ஒன்றியச் செயலாளர் எம்.நாகராஜன், கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு சி.பி.முருகானந்தம், ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் ஜெ.குணசேகரன், வி.தர்மதாஸ், கோவி.அறிவழகன், அரவிந்தன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



த.லெனின்

**இல்லாத சரஸ்வதி நதியை ஆய்வு செய்ய கோடிக்கணக்கில் பணம் ஒதுக்கீடு! யாரும் பேசாத சமஸ்கிருதத்தை வளர்க்க நாடு முழுவதும் ஏற்பாடு! இதுவே பாஜக ஆளும் திரு நாடு! மக்கள் கைகளில் அளித்திருப்பது என்னவோ திருவோடு!**

# பேச நாதியில்லாத சமஸ்கிருதத்தை தாங்கிப் பிடிப்பது ஏன்?




உலகமே அறிவியல் ஆய்வுகளில் ஈடுபட்டு, புதியன கண்டுபிடித்து, பொருளாதாரத்தை வளர்க்கும் காலத்தில் நமக்கு வாய்த்தது என்னவோ இந்த ஏழரை சனிகள்தான்!

ஆண்டுதோறும் நடைபெறும் 1008 சம்ஸ்கிருத சம்பாஷண் ஷிவிர். அதாவது சமஸ்கிருத உரையாடல் அமர்வுகளின் நிறைவு விழா கடந்த மே 4 ஆம் தேதி டெல்லியில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற உள்துறை அமைச்சர் அமித்ஷா அநேக இந்திய மொழிகளுக்குத் தாய் சம்ஸ்கிருதம் என்றும் இம்மொழியை ஊக்குவிப்பது அதன் மறுமலர்ச்சிக்கானது மட்டுமல்ல, நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கானது என்று பேசியுள்ளார். அப்படி என்றால் தமிழ்நாட்டுக்கு வந்தால் தமிழையும், திருக்குறளை, சிலப்பதிகாரத்தை, தமிழ் இலக்கிய வளமை பற்றியெல்லாம் அவர்கள் புகழ்ந்து பேசுவது வெறும் உதட்டளவில் என்பது இப்போது வெளிப்பட்டிருக்கிறது.

சமஸ்கிருதத்தை உயர்த்தி மற்ற மொழிகளைத் தாழ்த்திப் பேசுவது அவர்களின் பிறவிக் குணம்.கடந்த காலங்களில் காஞ்சி சங்கராச்சாரியார், உலகம் மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி சமஸ்கிருதம் என்று குறிப்பிட்டதும் அதற்கு வள்ளலார் அப்படி எல்லா மொழிகளுக்கும் தாய்மொழி ஒன்று இருக்குமேயானால் அதற்கு தந்தை மொழி ஒன்று இருக்க வேண்டும் அல்லவா அந்தத் தந்தை மொழிதான் தமிழ் என்று ஓங்கி அடித்த நிகழ்ச்சிகளும் உண்டு.

## சமஸ்கிருதத்துக்குப் புகழ் மாலை

காலனித்துவ ஆட்சிக்கு முன்பே சம்ஸ்கிருதத்தின் வீழ்ச்சி தொடங்கியது. அதன் மறுமலர்ச்சிக்கு பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சியில் உயிர்ப்பிக்கும் முயற்சி நடக்கிறது. உலகின் புகழ்பெற்ற மொழி அறிஞர்கள் பலரும் சம்ஸ்கிருதத்தை அறிவியல்பூர்வ மொழியாக அங்கீகரித்துள்ளனர் என்கிறார் அமித்ஷா. ஆனால் எந்த அறிவியல் அறிஞர் என்பதுதான் யாருக்கும் தெரியவில்லை!

இதில் அறிவியல் அறிஞர்களை விட மொழி வல்லுனர்களின் கருத்துதான் மிக முக்கியம். அப்படிப் பார்க்கிற போது ஈரானிய, ஐரோப்பிய வகை மொழி குடும்பமாகத்தான் சமஸ்கிருதத்தை அவதானிக்கின்றனர். எழுத்து வடிவம் அற்ற, பேச்சு வழக்கில் மட்டும் இருந்த பிராகிருதத்தைச் செம்மைப்படுத்திச் செய்யப்பட்ட மொழிதான் சமஸ்கிருதம் என்பது அவர்களின் முடிவு.

## தேவ நேயபாவாணர்

மொழிஞாயிறு பாவாணர் இலக்கியம் என்னும் சொல்லிற்குத் தரும் விளக்கம் புதுமையும், முன்மைத் திறனும் (Originality) உடையதாக இருக்க வேண்டும் என்கிறார்.

இலக்கு இலக்கியம், இலக்கு இலக்கணம். இலக்கு(குறி);குறிக்கோள். சிறந்த வாழ்க்கைக் குறிக்கோளான, அறத்தை எடுத்துக் காட்டுவது, இலக்கியம். சிறந்த மொழிக் குறிக்கோளான, அமைப்பை எடுத்துக் கூறுவது, இலக்கணம். இலக்கணத்திற்கு அணங்கம் என்றும் இலக்கியத்திற்கு அணங்கியம் என்றும் பெயருண்டு.

இலக்குலஷ்(வ) இலக்கியம்லஷ்ய(வ) இலக்கணம்இலஷணம்(வ) இலக்கணம், இலக்கியம் என்னும் சொற்கள் போல் லஷண, லஷ்ய என்னும் வடசொற்கள் மொழியமைதியையும் (Grammar), நூற்றொகுதியையும் (Literature) குறிப்பதில்லை என்பது பாவாணரின் கருத்தாகும். இத்தகைய எண்ணப் போக்கே பரவலாகத் தமிழ் அறிஞர்கள் இடையே நிலவி வருகிறது.

தமிழ் உலக மொழிகளில் மூத்ததும், மிகத்தொன்மையான காலத்திலேயே செம்மையான மொழியாக வடிவம் பெற்றது எனவும், திராவிடத்திற்குத் தாயாகவும், ஆரியத்திற்கு மூலமாகவும், விளங்கிய மொழியென வாதிட்டவர் பாவாணர். கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் உள்ளிட்டவைகளுக்குத் தன் சொற்கள் பலவற்றை அளித்தது என்று நிறுவியவர் பாவாணர் ஆவார். தமிழின் வேர்ச்சொல் வளத்தையும் செழுமையையும் சுட்டிக்காட்டி, அதன் வளர்ச்சிக்கான வழியையும் அவரின் நூல்களின் வழி உலகிற்கு எடுத்து உரைத்தவர்.

Literature என்னும் ஆங்கிலச் சொல், இலக்கியம் எனும் பொருளில் கி.பி. 1812தான் வழக்கிற்கு வந்ததென்று ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி எடுத்துரைக்கின்றது. ஆனால் அதற்கு முன்பே தமிழில் இவை பயின்று வருகிறது. தமிழ்ச் சொற்கள் நிறைய சமஸ்கிருதத்திலும், ஏனைய பல உலக மொழிகளிலும் விரவியிருக்கிறது. சமீபத்திய அகழ்வாராய்ச்சிகள் இந்தியாவின் இரும்புக் காலம் தமிழ்நாட்டில் இருந்து தொடங்கியதாகச் சான்றாதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, உலகின் மூத்த மொழி தமிழ் இருக்கும் போது அதற்கு எந்த உதவியும் செய்யாத ஒன்றிய அரசு சமஸ்கிருதத்திற்கு மட்டும் ஏன் இந்த முக்கியத்துவம்? காரணம் இதுதான் சமூகத்தை வேதங்களின் அடிப்படையில் நான்கு வர்ணங்களாகப் பிளவுபடுத்துகிறது, பிறப்பின் அடிப்படையில் அவற்றைப் புனிதப்படுத்துகிறது, அது தொடர வேண்டும், அதன் மூலம் உயர் சாதிய ஆதிக்கம் வேண்டும் என்பதற்காகத்தான் இதனை உயர்த்திப் பிடிக்கின்றனர்.

## சம்ஸ்கிருதத்தை ஊக்குவிக்கும் பாஜக!

சம்ஸ்கிருதம் உலகின் மிக அறிவியல்பூர்வமான மொழி மட்டுமல்லாமல், இணையற்ற இலக்கணக் கட்டமைப்பையும் கொண்டுள்ளது. இந்தியாவில் சமஸ்கிருதத்திலேயே முற்றிலும் தகவல்தொடர்புகளை மேற்கொள்ளும் 4,000 கிராமங்கள் உள்ளன என்றும் அந்த நிகழ்ச்சியில் அமித்ஷா பேசியுள்ளார்.

அத்துடன் 'அஷ்டாதசி' திட்டத்தின் கீழ் சுமார் 18 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. அரிய சம்ஸ்கிருத நூல்கள் வெளியீடு, இந்நூல்களின் மொத்தக் கொள்முதல் மற்றும் மறுபதிப்புக்கு அரசு நிதியுதவி வழங்குகிறது. புகழ்பெற்ற சம்ஸ்கிருத அறிஞர்களுக்கான கௌரவ ஊதியம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மோடி அரசின் புதிய தேசியக் கல்விக் கொள்கை, சம்ஸ்கிருதத்தை இந்திய அறிவு முறைக்குத் திட்டமிட்டுத் திணிக்கிறது. 'ஸஹஸ்ர சூடாமணி' திட்டத்தின் கீழ், புகழ்பெற்ற சம்ஸ்கிருத அறிஞர்களைக் கல்வியாளர்களாக நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்ஸ்கிருதம் மற்றும் பிராகிருத மொழிகளில் சிதறிக் கிடக்கும் கையெழுத்துப் பிரதிகளைச் சேகரிக்க ரூ.500 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பிரசாரம், அரசின் முக்கிய முயற்சிகளில் ஒன்றாகும்.

52 லட்சத்திற்கும் மேற்பட்ட கையெழுத்துப் பிரதிகள் ஏற்கெனவே ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. சுமார் 3.5 லட்சம் பிரதிகள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன.

## பன்மைத்துவத்தை அழிக்க சமஸ்கிருதம்!

நாட்டில் எந்த மொழிக்கும் எதிர்ப்பு இல்லை, யாரையும் அவர்களின் தாய்மொழியில் இருந்து விலக்கி வைக்க முடியாது. ஏறத்தாழ அனைத்து இந்திய மொழிகளுக்கும் தாய் சம்ஸ்கிருதம். சம்ஸ்கிருதம் வளமாகவும், வலுவாகவும் மாறும்போது, அது நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு மொழியையும் பேச்சுவழக்கையும் மேம்படுத்தும் என்று கயிறு திரிக்கின்றனர். அப்படியொன்றும் நடக்கப் போவதில்லை. இந்தியாவில் இருக்கும் அனைத்து மொழிகளையும் அழித்து நமது பன்மைத்துவத்தைச் சிதைத்து ஒரு கலாச்சாரத்தை, ஒரு மொழியைத் திணிக்கும் குரூர எண்ணம் இதற்குள் ஒளிந்திருப்பது உறுதி ஆகிறது.

நாட்டின் நம்பிக்கை, பாரம்பரியம் மற்றும் காலத்தால் அழியாத சாராம்சத்தை சம்ஸ்கிருதம் பிரதிபலிக்கிறது. சம்ஸ்கிருதத்தில் பாதுகாக்கப்பட்ட அறிவுச் செல்வம், அனைத்துத் துறைகளிலும் பரவியுள்ளது என்று அமித்ஷா ஒரே போடாகப் போட்டுள்ளார்.

இந்தப் பொக்கிஷம் உலகம் முழுவதும் கிடைக்கச் செய்யப்பட வேண்டுமாம். வேதங்கள், உபநிஷத்துகள் மற்றும் எண்ணற்ற சம்ஸ்கிருதக் கையெழுத்துப் பிரதிகளில் உள்ள ஆழ்ந்த அறிவு, உலக மக்களைச் சென்றடைய வேண்டும் என்றும் அமித்ஷா வலியுறுத்தினார். அப்படி எனில் அவற்றின் அறிய கண்டுபிடிப்பான சாதியையும் உலகமயமாக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ?

## நிஷிகாந்த் துபே

தேசியக் கல்விக் கொள்கை பற்றி முன்பு நாடாளுமன்றத்தில் பேசிய ஜார்க்கண்ட் மாநில சர்ச்சைக்குரிய பாஜக எம்பி நிஷிகாந்த் துபே சமஸ்கிருதம்தான் பழமையான மொழி, திமுக எப்போதும் தமிழை மிகவும் பழமையான மொழி என்கிறார்கள். ஆனால், சமஸ்கிருதம் என்பது அதனைவிட பழமையான மொழி. கர்நாடகம், தெலங்கானா, தமிழகம் உட்பட நாடு முழுவதும் அனைத்துக் கோயில்களிலும் வழிபாட்டு மொழி சமஸ்கிருதம்தான் என்று ஆதாரம் வைக்கிறார். பாவம் பழமையான பல கோயில்களில் தமிழ் வழிபாட்டு முறைதான் இருந்தது, இடையில் சமஸ்கிருதம் அதை அபகரித்துக் கொண்டது அதிலிருந்துதான் இந்தப் போராட்டமே தொடங்குகிறது என்பதை அறியாமல் பேசுகிறார்!

## தமிழுக்கு அநீதி! சமஸ்கிருதத்திற்கு அதிக நிதி!

தமிழ்நாடு, புதுச்சேரி உட்பட உலகம் முழுவதும் சுமார் 10 கோடி பேர் பேசும் தமிழ் மொழியை, ஆறு நாடுகளில் தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்ட தமிழ் மொழியை ஆராய்ச்சி செய்யும் ஒன்றிய செம்மொழி தமிழாய்வு நிறுவனத்திற்கு ரூ.74.1 கோடி மட்டும் ஒதுக்கி இருக்கிறது, யாராலும் பேசப்படாத, பேச்சுவழக்கில் இல்லாத சமஸ்கிருத மொழிக்கு ரூ.1,487.9 கோடியை ஒதுக்கீடு செய்து இருக்கிறது உதவாக்கரை ஒன்றிய அரசு.

இந்நிலையில் தாய்மொழி வழிக் கல்வி குறித்து அடிக்கடி இவர்கள் முழங்கி வருகிறார்கள். தாய் மொழி வழிக் கல்வி என்றால் உலகம் முழுக்க உள்ள எல்லா மொழிகளுக்கும் சமஸ்கிருதமே தாய்மொழி என்று இல்லாத ஒன்றை நிலைநாட்டத் துடிக்கின்றனர். எனவே அந்த சமஸ்கிருத, இந்தி வழிக் கல்வியைத்தான் அவர்கள் திணிக்கிறார்கள்!

தொடர்புக்கு: 9444481703

# எம்.செல்வராஜ் எம்.பி. ஓர் ஆளுமை


அ.பாஸ்கர்

**ஒன்றுப்பட்ட தஞ்சை மாவட்டத்தில் நீடாமங்கலம் ஒன்றியம் கம்யூனிஸ்ட் கட்சியின் வலுவான செங்கொடித் தளமாகும் கப்பலுடையான் என்ற குக்கிராமத்தில் கம்யூனிஸ்ட் கட்சியை நேசிக்கும் குடும்பமாகவும் விவசாயிகள் சங்க இயக்கத்தில் சேர்ந்து செயல்பட்டு வந்த தோழர் முனியன் குஞ்சம்மாள் தம்பதியரின் கடைசி மகனாக 16.3.1957ல் பிறந்தார் தோழர் எம்.செல்வராஜ்**

கப்பலுடையான் கிராமத்தில் இருந்து நடந்தே சென்று கொரடாச்சேரி மேல்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பை முடித்தார். பின்பு திருவாரூர் திரு வி.க.அரசு கலைக்கல்லூரியில் பி.ஏ இளங்கலை பயின்றார். படிக்கின்ற காலங்களில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது ஈர்க்கப்பட்டு அனைத்திந்திய மாணவர் இளைஞர் பெருமன்றத்தில் சேர்ந்து இளைஞர்களின் உரிமைகளுக்காகப் போராடினார்.

கிராம நிர்வாக அலுவலர் (VAO) பதவிக்கு இவர் தேர்வு செய்யப்பட்டார். அரசுப் பணி வேண்டாம் என்று தவிர்த்து விட்டு கம்யூனிஸ்ட் கட்சியில் முழு நேரப் பணியாகத் தொடர்ந்து பணியாற்றினர் .

ஒன்றுப்பட்ட தஞ்சை மாவட்டத்தில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டுச் சிறப்பாகச் செயலாற்றினார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர பற்று கொண்ட இவரை மார்க்ஸியப் பயிற்சி வகுப்பு பயில்வதற்காக சோவியத் யூனியனுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அனுப்பி வைக்கப்பட்டார்.

ரஷ்யாவில் ஓராண்டுக்காலம் தங்கி மார்க்சியக் கல்வி பயின்றார்.

பினாமிநில மோசடியை அம்பலப்படுத்தும் வகையில் நிலத்தில் எறங்கி நடவு நடும் போராட்டத்தைக் கட்சி நடத்தியது.

தோழர் எம்.காத்துமுத்துவின் வழிகாட்டுதலோடு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேச சோழகர் தலைமையில் நல்லூர் கிராமத்தில் நடைபெற்ற போராட்டத்தில் 35 தோழர்களைக் காவல் துறை கைது செய்து திருச்சி சிறைக்குக் கொண்டு சென்றது. அன்றைய நாளில் எம்.செல்வராஜ் பங்கேற்றுச் சிறைசென்றது மட்டுமல்ல. கடலூர் காவல் நிலையத்தில் தினமும் கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனை ஜாமீனுயுடன் விடுதலை செய்யப்பட்டார்.

தினமும்கடலூர்சென்றுவரபணம் இல்லாத காரணத்தால் தன்னுடன் இருந்த தோழர்களுடன் சேர்ந்து கடலூரில் விவசாயி ஒருவரிடம் அங்கு விதைக்கப்பட்டு இருந்த நாற்றங்காலில் உள்ள நாற்றுகளைப் பறித்துத் தருவதற்காகக் குத்தகைக்குப் பேசி நாற்றுகளைப் பறித்துக் கொடுத்து அதில் வந்த பணத்தைச் செலவுக்கு வைத்துக் கொண்டு தோழர்களுடன் தானும் நிபந்தனை ஜாமீனில் கையெழுத்து இட்டு வந்தார்கள்.

இவரின் போராட்ட வாழ்க்கை தொடர்ந்தது...

கட்சியின் நீடாமங்கலம் ஒன்றியப் பொறுப்புச் செயலாளர், பிறகு செயலாளர் பொறுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அதை ஏற்று நீடாமங்கலம் முழுவதும் கம்யூனிஸ்ட் கட்சி கிளைகளை அமைப்பதும் கட்சியில் மக்களைச் சேர்ப்பதும் என்ற பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார்.

இவரின் செயல்பாட்டால் கட்சி அங்கு வலுவான இயக்கமாக மாறியது.

கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிரமான இளைஞராகவும், ஒன்றியச் செயலாளராகவும் பதவி வகித்து தோழர் எம்.செல்வராஜ் அவர்களுக்கு நாகப்பட்டினம், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து படுகொலை செய்யப்பட்ட தோழர் எஸ்.ஜி.முருகையன் எம்.பி அவர்களின் மூத்த மகள் கமலவதனத்தைத் திருமணம் செய்து வைக்கக் கட்சி முடிவு செய்து 1984 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது.

1989 ஆம் ஆண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியில் நாகப்பட்டினம் தொகுதி நாடாளுமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இந்த வெற்றி என்பது தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியில் ஒரே ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் அவர்கள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருச்சி, தஞ்சை, நாகை அகல ரயில் பாதை கிடப்பில் போடப்பட்டதைக் கண்டித்து அன்றைய மத்திய ரயில்வே அமைச்சராக இருந்த ராம் விலாஸ் பாஸ்வான் அவர்களிடம் எங்கள் பகுதிக்கு அகல ரயில் பாதைத் திட்டத்திற்குப் போதிய நிதியைத் தாங்கள் ஒதுக்கவில்லை என்றால் வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்து ஆட்சியைக் கலைத்து விடுவேன் என்று பாராளுமன்றத்தில் கர்ஜித்தார்.



## காவிரி நதி நீர் போராட்டக் களத்தில்..

1989 ஜுன் 12 காவிரி நதிநீர்ப் பிரச்சனை மீது நடுவர் மன்ற அமைக்க வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க முன் முயற்சியால் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட மக்களின் ஆதரவும் பங்கேற்போடும் வரலாற்றுச் சிறப்புமிகு மனிதச் சங்கிலி போராட்டம் தஞ்சாவூர் இராஜாராஜன் சிலையில் இருந்து வேதாரண்யம் இராஜாஜி பூங்கா வரை 110 கிலோ மீட்டர் தூரம் நடைபெற்றது. அந்தப் போராட்டத்தில் முன்னனி பங்கு வகித்தவர் தோழர் எம்.செல்வராஜ். ஓஎன்ஜிசி தொழிலாளர்களை அணி திரட்டித் தொழிற்சங்கம் அமைத்துப் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்குப் பல உரிமைகளைப் பெற்றுத் தந்தவர்.

ரயில்வே துறையில் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பது வரலாறு.

வேதாரண்யம் அகஸ்தியம் பள்ளி வரை புதிய இருப்புப் பாதை போடப்பட்டு ரயில் பஸ் இயக்கப்பட்ட முயற்சி மேற்கொண்டவர்.

வாரத்திற்கு ஒரு நாள் வேதாரண்யம் திருச்சி வரை ரயில் சேவை தொடர்கிறது.

திருவாரூர் காரைக்குடி ரயில்பாதையை நிறுத்திய ஒன்றிய அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர் போராட்டங்களை நடத்தியது அன்றைய கட்சியின் மாவட்டச் செயலாளர் தோழர் வெ.வீரசேணன் வழிகாட்டுதலோடு திருவாரூரில் தொடங்கி முத்துப்பேட்டை வரை 60 கிலோமீட்டர் தூரம் மாவட்டம் முழுவதும் மக்களைத் திரட்டி மனிதச் சங்கிலிப் போராட்டத்தை நடத்தியது. போராட்டம் வெற்றியடைய திறம்படப் பணியாற்றினார். அந்தப் போராட்டத்தின் சாதனைதான் திருவாரூர் காரைக்குடி இரயில்பாதை மீண்டு அமைய காரணமாக அமைந்தது, பணிகள் தொடங்கின.

நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த பின் கிடப்பில் கிடந்த திருவாரூர், காரைக்குடி ரயில் சேவை மற்றும் கேட் கீப்பர்களை நிரந்தரமாகப் பணி அமர்த்த வேண்டும் என்று கோரிக்கைகளை தொடர்ந்து மத்திய அரசிடம் வலியுறுத்தி வெற்றியும் பெற்றார்.

திருவாரூக்கு நிறுத்தப்பட்ட இரயில்களைத் திரும்பக் கொண்டு வருவதற்குப் பெருமுயற்சி எடுத்து ரயிலை இயக்க வைத்தவர்.

இந்தியாவில் அப்போது இல்லாத திட்டமான பயிர்ப் பாதுகப்புத் திட்டத்தை டெல்டா மாவட்ட விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தவர்.

திருவாரூர்நகரில்ஏற்படும்போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக திருவாரூர் வர்த்தக சங்கத் தோடு இணைந்து ரயில்வே கீழ் பாலம் அமைத்தவர்.

ஒன்றுபட்ட திருவாரூர் மாவட்டக் கட்சியின் துணைச் செயலாளர், பொறுப்புச் செயலாளர். திருவாரில் இருந்து பிரிக்கப்பட்ட பிறகு நாகப்பட்டினம் மாவட்டச் செயலாளராக மூன்று முறை கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர். தேசியக் குழு உறுப்பினர். ஏ.ஐ.டி.யூ.சி மாவட்ட தலைவர் மாநில துணைத் தலைவர் எனப் பல பொறுப்புகளில் திறம்படச் செயல்பட்டவர்.

நாகப்பட்டினம் நாடாளுமன்ற தொகுதியில் 1989, 1996, 1998, 2019 ஆம் ஆண்டுகளில் நான்கு முறை வேட்பாளராக கதிர் அரிவாள் சின்னத்தில் போட்டியிட்டவர், மூன்றுமுறை வெற்றி கண்டவர்.

மரண நுழைவாயில் பல முறை சென்று அதை வென்றுவந்து 2024 இல் மே மாதம் 13ஆம் தேதி உடல்நிலைக் குறைவால் சென்னையில் தனியார் மருத்துவமனையில் இயற்கை எய்தினார்.

ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் ஆளுமை மிக்கக் கம்யூனிஸ்ட் தலைவராகவும் ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களின் தோழனாகவும் வாழ்ந்து காட்டிய இவருக்குத் தமிழக அரசு மரியாதையுடன் 21 குண்டுகள் முழங்க சித்தமல்லியில் அவரது இடத்தில் இறுதியடக்கம் செய்யப்பட்டது.

தோழர் எம்.செல்வராஜ் நினைவைப் போற்றி வீரவணக்கம் செய்வோம்...

**தொடர்புக்கு: 9488488339**

# திருச்செங்கோடு எஸ்.மணிவேல் மறைவு: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



கட்சியின் மூத்த உறுப்பினர் திருச்செங்கோடு எஸ்.மணிவேல் மறைவுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றுபட்ட சேலம் மாவட்ட முன்னோடி எஸ்.மணிவேல் (70) 22.04.2025 அன்று அவரது இல்லத்தில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருச்செங்கோடு நகரில் அடித்தட்டுத் தொழிலாளர் குடும்பத்தில் 1955 மே 1 ஆம் தேதி பிறந்தவர். திருச்செங்கோட்டில் பள்ளிக்கல்வியை முடித்து, திருச்சி நேரு நினைவுக் கல்லூரியில் சேர்ந்து பொருளாதாரத்தில் இளங்கலை பட்டம் பெற்றவர். கல்லூரியில் பயிலும் (1970 73) காலத்தில் கல்வி உரிமைக்காக மாணவர்களை அணிதிரட்டி போராடியவர். இதன் மூலம் கல்லூரி மாணவர் சங்கச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டவர்.

கல்லூரி படிப்பு முடித்து, இயக்கப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடத் தொடங்கினார். கட்சியின் மூத்த தலைவர்கள் எம்.கல்யாணசுந்தரம், கே.வி.ராமசாமி, டி.எஸ்.அர்த்தனாரி ஆகியோர் வழிகாட்டுதலுடன் தொழிற்சங்க அரங்கில் பல்வேறு தொழிற்சங்கங்களுக்கு தலைமை தாங்கி மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்தார். சேலம் மேக்னசைட் கனிமத் தொழிலாளர் சங்கம், திருச்செங்கோடு வார்ப்பிங் சைசிங் தொழிலாளர் சங்கம், புள்ளிக்கார் மில் தொழிலாளர் சங்கம், உள்ளாட்சித் தொழிலாளர் சங்கம் ஆகிய பல்வேறு தொழிற்சங்கங்களில் பொறுப்பேற்றுச் செயல்பட்டு வந்தவர்.

1980–81 ஆம் ஆண்டில் திருச்செங்கோடு வட்டாரத்தில் உள்ள வார்ப்பிங்சைசிங் தொழிலாளர்களை அணிதிரட்டி, சங்கம் அமைத்த காலத்தில், முதலாளிகளும், அரசும் இணைந்து நடத்திய அடக்குமுறையை எதிர் கொண்டவர். இந்தப் போராட்டத்தில் அவர் மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்து (307) கைகளில் விலங்கு போட்டு இழுத்துச் செல்லப்பட்டவர். இதனைத் தொடர்ந்து 1984 ஆம் ஆண்டில் லட்சுமி சரஸ்வதி மில் முதலாளி, ரௌடிகளைக் கொண்டு குண்டு வீசிய சதிச்செயலை மறைத்து, அந்தச் சம்பவத்தில் மணிவேல் மீது வழக்கு போடப்பட்டது.

ரௌடிகளின் தாக்குதலை எதிர் கொள்ள பகத்சிங் உடற்பயிற்சிக் கழகம் அமைத்து இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்து வெற்றி கண்டவர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் 1976 ஆம் ஆண்டில் உறுப்பினராகச் சேர்ந்து, சேலம் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர், நாமக்கல் மாவட்டம் உருவான பிறகு நாமக்கல் மாவட்டச் செயலாளர், கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர், மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் என்ற நிலைக்குப் படிப்படியாக உயர்ந்தவர்.

தொழிற்சங்க அரங்கிலும் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் நிலையில் செயல்பட்டவர். தொழிலாளர் தரப்பு நியாயங்களை எடுத்துக் கூறி, நிலைநாட்டுவதில் வல்லவர்.

இவரது வாழ்விணையர் மைதிலி, வழக்கறிஞர்

என்.கார்த்தியின் சகோதரி என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு திருமணமான பிரியதர்ஷினி, மங்கை என இரு மகள்கள் இருக்கிறார்கள். கட்சிக் கொள்கை வழி நின்று வாழ்ந்து காட்டிய சிறப்புக்குரிய குடும்பமாகும்.

தோழர் எஸ்.மணிவேல், சில ஆண்டுகளாக சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டதால், தொடர்ந்து சுத்திகரிப்பு (டயாலிசிஸ்) செய்து கொண்டு, கட்சிப் பணியாற்றியவர். அரசியல் தெளிவும், தத்துவக் கண்ணோட்டத்தில் பிடிப்பும், கட்சி முடிவுகளை ஏற்கும் பணிவும், உழைக்கும் மக்களின் உரிமைக்குப் போராடும் குணமும் கொண்ட மிகச் சிறந்த ஊழியரை நாமக்கல் மாவட்ட கட்சி இழந்து நிற்கிறது.

தோழர் எஸ்.மணிவேல் மறைவுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் கூறி, அஞ்சலி செலுத்துகிறது. அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், நாமக்கல் மாவட்ட கட்சி மற்றும் தொழிற்சங்க தோழர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.


மே.து.ரா.

# மருத்துவ நுழைவுத் தேர்விடங்களில் மனித உரிமை மீறல்கள்





**இன்னோர் இன்னுயிர் இழப்புடனும் இணையற்ற மனித உரிமை மீறல்களுடனும் இந்த ஆண்டின் இளம்நிலை மருத்துவக் கல்விக்கான நுழைவுத் தேர்வு நடந்து முடிந்திருக்கிறது.**

மேல்மருவத்தூர் அருகில் உள்ள ஊரினைச் சார்ந்த செல்வி கயல்விழி மட்டுமல்லாது, ராசத்தான் மாநிலத்தின் கோட்டா நகரில் உள்ள பயிற்சியகம் ஒன்றிலிருந்த மத்தியப் பிரதேசத்தைச் சார்ந்த மற்றொரு மாணவியும் உயர் துறந்துள்ளார்.

நுழைவுத் தேர்வுகளுக்கான பயிற்சியகங்கள் நிறைந்துள்ள கோட்டா நகரில் இந்த ஆண்டு மட்டும் 14 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். கடந்த ஆண்டில் அதே ஊரில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

நுழைவுத்தேர்வு அழுத்தத்தில் உயிரிழந்த அனிதாவின் ஈகையைத் தொடர்ந்து ஏற்பட்டுவரும் துயரச் செயல்கள் எல்லை கடந்து சென்றுகொண்டிருக்கின்றன. தேர்வுக்கு முன்னரே அச்சத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாகப் பெருகித்தான் வருகிறது.

இதன் தொடர்ச்சியாகத் தேர்வு நடக்கும் இடங்களில், மாணவர்களை அச்சுறுத்தும் வகையிலும் மனித உரிமைகளைப் பறிக்கும் முறையிலும் ஆடை அணிகலன்களை ஏறக்குறையக் கலைந்தும் நடத்தப்படுகின்ற ஆய்வுகள், தேர்வுக்கு முன்னரே மாணவர்களின் உறுதியைத் தகர்த்து, மன அழுத்தத்தையும் உடல் தளர்ச்சியினையும் ஏற்படுத்தக்கூடியனவாக அண்மைக் காலங்களில் மாறியிருக்கின்றன.

மணமான பெண்களின் மங்கல அணிகலன்களை அகற்றுவது என்ற அளவுக்கு இது முற்றியிருக்கிறது. தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, இந்திய ஒன்றியம் முழுதும் மணமான மகளிர் மாங்கல்யம் எனப்படும் அணியினைத் தங்களது தனிப்பெரும் அடையாளமாகக் கருதிக் காத்து வருகின்றனர்.

பெண்களின் மங்கல அணிகளை அகற்றச் செய்தபோது அந்தப் பெண்களின் மனநிலை எப்படி இருந்திருக்கும்? என்பதைப் பற்றிய உள்ளக் குமுறல்கள் இப்போது வெடித்து வருகின்றன. தேர்வினை எழுதும் முன் நடந்த இத்தகைய செயல், தேர்வெழுதும் முயர்களது முயற்சியில் இடையூற்றினை ஏற்படுத்தியிருக்கும் என்பதிலும் அய்யமில்லை.

மகளிர் முடியினை அவிழ்த்து, அதற்குள் ஏதேனும் வைத்திருக்கிறார்களா? என்று பார்த்திருக்கிறார்கள்.

கர்நாடகத்தில் பார்ப்பன மாணவர் அணிந்திருந்த பூணூலை நீக்கச் செய்தது போராட்டங்களுக்கு இடம் கொடுத்துவிட்டது. இது குறித்து ஆய்வு நடத்த அரசும் ஆணையிட்டிருக்கிறது.

ஆனால், பெண்களின் மங்கல அணியினை அகற்றச் செய்தது பரவலாக நடந்திருக்கிறது. இந்தியப் பண்பாட்டின் பெருமைகளையும் பெண்களின் உரிமைகளையும் காப்போராகத் தங்களைக் காட்டிக்கொளும் பா.ச.க.வினர் எதுவும் நடக்காதது போல நாடகமாடுவது வேடிக்கைதான். இத்தகைய செயல்களுக்கு விளக்கங்களும் அவர்களிடமிருந்து வரவில்லை.

இவை மட்டுமின்றி, ஆடைகளில் இடம் பெற்றுள்ள பொத்தான்களை வெட்டி எடுத்ததும் நடந்திருக்கிறது. ஆண்களுக்கும் பெண்களுக்குமான சில வகையான ஆடைகளும் தடுக்கப்பட்டிருக்கின்றன. இதனால், உடனடியாக விரைந்து சென்று மாற்றாடை வாங்கி அணிந்திருக்கின்றனர்.

பொதுவாக இத்தகைய நுழைவுத் தேர்வினை நடத்துவோர், தெளிவாகவும் வெளிப்படையாகவும் முன்னரே நடைமுறை விதிகளை வகுத்து வழங்கிவிடுவார்கள். செய்யவேண்டியன எவை, செய்ய வேண்டாதன எவை என்பவற்றை விரிவாகப் பட்டியலிட்டும் கொடுப்பதுதான் வழக்கமாக இருந்து வருகிறது.

மங்கல அணியினை அணிந்து வரக் கூடாது, பூணூல் இருக்கக் கூடாது, சட்டையில் பொத்தான் மிகுந்திருக்கக் கூடாது, குறிப்பிட்ட முறையில் மட்டுமே முடி அழகுபடுத்தப்பட வேண்டும், ஆண்களும் பெண்களும் எத்தகைய ஆடைகளை அணிந்து வரவேண்டும் என்பன போன்ற விவரங்கள் எழுத்து வடிவில் வரையறை செய்யப்பட்டுத் தரப்பட்டதாகத் தெரியவில்லை.

இத்தகைய கெடுபிடிகளுக்கும் கொடுமைகளுக்கும் இடையில் இத்தேர்வினை நடத்துவதற்கான வேண்டல் ஏன் வந்தது? என்பதுதான் புரியவில்லை.

நுழைவுத் தேர்வு என்பது இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கு மட்டும் நடத்தப்படுவதில்லை. ஒன்றிய, மாநில அரசுகளின் உயர்நிலை மேலாண்மைப் பொறுப்புகளில் செயல்படும் இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி போன்ற அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கவும் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்துக்கான (ஐ.ஐ.டி.) சேர்க்கைக்காகவும் இரண்டு கட்டங்களாகத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இந்திய மேலாண்மை நிறுவனம் (ஐ.ஐ.எம்.) போன்ற உயர் மேலாண்மை நிறுவனங்களின் மாணவர் சேர்க்கைக்காகப் பொதுச் சேர்க்கைத் தேர்வு ஒன்று நடத்தப்பட்டு, அதனை நூற்றுக்கணக்கான நிறுவனங்கள் பயன்படுத்திக்கொள்கின்றன.

இத்தகைய உயர்நிலைத் தேர்வுகள் நடக்கின்ற இடங்களில் இல்லாத வன்முறைகளும் குழப்பங்களும் மருத்துவ நுழைவுத் தேர்வுகளில் மட்டும் ஏன் நிலவுகின்றன? என்பதுதான் புதிராக இருக்கிறது.

இன்றைய நுட்ப வளர்ச்சியில், இத்தகைய கொடும் நடைமுறைகளுக்கு மாற்றுகள் இல்லாமல் இல்லை.

வினாக்களை வைத்துக்கொண்டு வரிக் கணக்கில் விடைகளை வரைகின்ற தேர்வு முறை அல்ல இது. இயற்பியல், வேதியல் வினாக்களுக்குக் கருத்துருக்களைப் பயன்படுத்தியும் கணக்கீடு செய்தும் தீர்வு கண்டும் விடை தரும் வகையில்தாம் தேர்வு முறைகள் அமைந்திருக்கின்றன.

மேலும், தரப்பட்டுள்ள நான்கு விடைகளில் எது பொருத்தமானது அல்லது ஏற்கத்தக்கது? என்ற வகையில் தேர்வு செய்கின்ற வினா வகைகளும் இருக்கின்றன.

இத்தகைய தேர்வு முறைகளில், பார்த்து எழுதுவது அல்லது குறிப்புகளை வைத்துக்கொண்டு மறுமொழி தருவது என்பன நேரடியாக நடக்க வாய்ப்புகள் குறைவு. இல்லை என்றுகூடக் கூறி விடலாம்.



வெளியே உள்ள ஒருவரிடம் தொடர்புகொண்டு, கேட்டு எழுதுவதும் எளிதில் நிறைவேறக்கூடியதாக இருக்கப் போவதில்லை.

இருந்தாலும், தேர்வு நடக்கும் இடத்திலிருந்து, வெளியாரிடம் தொடர்புகொள்ள முடியாதவாறு முடக்கும் கருவிகளை நிறுவலாம். இதனால், வெளித் தொடர்புகளுக்கான வழிகள் முழுமையாக அடைக்கப்பட்டுவிடுகின்றன. புறத் தொடர்புகள் அனைத்தையும் கட்டுப்படுத்த முடியும்.

இவையன்றி, தேர்வுகள் நடக்கும் அறைகளில் மேற்பார்வையாளர்களாக மேலும் சிலரை அமர்த்திக் கண்காணிக்க முடியும்.

இன்னும் கட்டுப்பாடுகளை உறுதி செய்துகொள்ளத் தேர்வு நடக்கும் அறைகளில் கண்காணிப்புக் கருவிகளைப் பொருத்தலாம்.

இவற்றையெல்லாம் மீறித் தேர்வர்கள் தவறுகளைச் செய்துவிட வழிகள் இருப்பதாகத் தெரியவில்லை. பலவாறான வழிகளும் வாய்ப்புகளும் இருந்தும், இவற்றையெல்லாம் மேற்கொள்ளாமல், உடல் அளவிலும் மன அளவிலும் அழுத்தம் தந்து, தேர்வு எழுதும் உறுதியினைக் குலைக்கும் முயற்சிகளை மேற்கொள்வதில் ஏதோ உள்நோக்கம் இருப்பதாகவே அய்யப்படவேண்டியுள்ளது.

குறிப்பாக, சமூகத்தின் பின்னிலையில் உள்ள மாணாக்கர் பலர் புறச் சூழல்களின் தடைகளைத் தாண்டி வரும்போது, அச்சுறுத்தும் செயல்பாடுகளால் உரிய முறையில் தேர்வினை எதிர்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது.

இளநிலை மருத்துவ நுழைவுத் தேர்வுகளில் ஆள் மாறாட்டங்கள், வினாத்தாள் வெளியாதல், விற்கப்படுதல் போன்ற குற்றச்செயல்கள் பெரிதும் நடைபெறுகின்றன. இவற்றுக்கெல்லாம் தேர்வினை நடத்துவோரே உறுதுணையாகவும் உடந்தையாகவும் இருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன, உச்ச நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின் அடிப்படையில், ஒன்றிய அரசின் நடுவப் புலனாய்வுப் பிரிவு, வழக்குகளைப் பதிவு செய்து விவரங்களைத் திரட்டி வருகிறது.

இந்த ஆண்டும்கூட, இத்தகைய வினாத்தாள் விற்பனை முயற்சிகள் நடைபெற்றதை ஊடகங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

நுழைவுத் தேர்வினைச் செம்மையாக நடத்துவதற்கு மாறாக, இத்தகைய இழிசெயல்களிலேயே தொடர்புடையோர் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இத்தகைய உரிமை மீறல்களுக்கு இடையில், மனித மனத்தின் மேன்மையினைத் தமிழ்நாட்டில் உள்ள காவலர்கள் நிலைநாட்டியிருப்பது பெருமை தருகிறது.

தேர்விடம் மாறி வந்துவிட்ட மாணவியைத் தனது காவல் வண்டியில் ஏற்றி உரிய இடத்துக்கு அனுப்பிய காவல் ஆய்வாளர், ஆடையில் மிகு அளவில் பொத்தான்கள் இருந்ததால் தடுக்கப்பட்ட மாணவியைத் தனது ஈரிருளை வண்டியில் கடைக்கு அழைத்துச் சென்ற பெண் காவலர், ஆவணங்களைத் தவறவிட்ட மாணவனுக்காக அருகில் உள்ள கடைக்கு ஓடிச் சென்று புதிதாக அச்சிட்டுக் கொடுத்த தலைமைக் காவலர். ஆவணங்களை மறந்த மாணவனுக்காக உரிய காலத்தில் பெற்றோருக்குத் தனது கைபேசியில் தெரிவித்து எடுத்துவரச் செய்த பெண் காவலர் எனப் பட்டியல் நீள்கிறது.

தனிப்பட்ட முறையில் காவல் துறையினர் தாங்களும் மனிதர்களே என்பதை உறுதிப்படுத்தியிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் பாராட்டுக்கும் போற்றுதலுக்கும் உரியோர் ஆவர்.

இதிலிருந்து மற்றொன்றும் புலனாகிறது. தேர்விடங்களில் நடைபெற்ற அனைத்து வன்முறைகளும் அத்துமீறல்களும் எல்லை தாண்டல்களும் உள்ளூர்ப் பொறுப்பாளர்களின் தனிப்பட்ட செயல்பாடுகளாக இருக்கவில்லை. தேர்வு நடத்துவோர் மேலிருந்து இட்ட ஆணைகளை ஆங்காங்கு இருப்போர் செயல்படுத்தியோராகவே தென்படுகின்றனர்.

இவற்றுக்கெல்லாம், தலைமை அமைச்சர் மோடிதான் பொறுப்பேற்க வேண்டும். நுழைவுத் தேர்வினை நடத்துவோரும் குற்றவாளிகளாகக் குறுகி நிற்கின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும் அத்துமீறல்கள் எல்லைகடந்துசென்றுகொண்டிருக்கின்றன. தேர்வுகள் நடந்த பின்னர் சில நாள்கள் பேசுபொருளாக இருந்து மறக்கப்பட்டு விடுகின்றன. மீண்டும் அடுத்த ஆண்டில் இதே வன்முறைகள் தொடர்கின்றன.

தனி மனித உரிமை மீறல்களாக உருவெடுத்திருக்கும் இத்தகைய செயல்பாடுகள் குறித்து விரிவான விசாரணை நடத்தப்படவேண்டும்.

தொடர்புக்கு : 9444075561

Posted at Egmore RMS Patrika Channel, Chennai - 600 008.



JANASAKTHI Tamil Weekly Cell: 9444331138
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# தமிழ்நாடு முழுவதும் 139 வது மே தின விழா கோலாகலம்

8 மணி நேரம் வேலை, 8 மணி நேர சமூகப் பணி, 8 மணி நேர ஓய்வு என்ற முழக்கத்தை முன் வைத்துப் போராடிய தியாகிகளை, போராட்ட உணர்வைப் போற்றக் கூடிய, உலகத் தொழிலாளர்கள் தங்கள் உரிமையை வென்றெடுத்த நாளான மே 1 அன்று ஏஐடியுசி, சிஐடியு சார்பில் தமிழ்நாடு முழுவதும் பேரணிப் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன.



செங்கல்பட்டு



திருப்பூர்



திண்டுக்கல்


செங்கல்பட்டு


திருப்பூர்



மத்திய சென்னை



வட சென்னை



திருச்சி


திருச்சி புறநகர்


தஞ்சாவூர்



கரூர்


கள்ளக்குறிச்சி



சேலம்


கோவை

Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: T.M.Murthi,
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.